உ

# அருள் ஒளி



## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்பதாவது குருபூசை


## அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை
## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.

( முன்னாள் தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை )



சைவமும், தமிழும் சமூகமும் வாழ
எம்மண்ணில் உதித்த அன்னை
ஏழை பங்காளராய் ஏற்றமுடன் பணி செய்து
இறவா பெருமை மண்ணில் பெற்ற
இனியவரே என்றும் நினைந்து வணங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்

கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்

திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

ஆனி மாத மலர்

2017

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல.: ISSN 2362 - 0587

ISBN 978 - 955 - 23 - 0019-3



e-mail : thurkaiammantemple@gmail.com

face book : tellidurga@gmail.com


## திருக்கோவில்களில் சைவநற்சிந்தனை, சமயப் பிரசங்கம் போன்ற அறிவுசார் நிகழ்ச்சிகள் அவசியம்

சைவ ஆலயங்களில் சமய வரலாறுகளையும், அறக்கருத்துக் களையும், புராண இதிகாசச் செய்திகளையும் எடுத்துரைக்கும் மரபு அருகி வருவது கவலை தரும் செய்தியாகும். ஆலயத் திருவிழாக் காலங்களில் சமயப் பிரசங்கம் செய்யும் நீண்ட பாரம்பரியம் இன்று ஒரு சில கோவில்களிலேயே நடைபெற்று வருகிறது. எமது தலைமுறை சமய விடயங்களை அறியாதவர்களாக இன்றுள்ளனர். கோவில்களில் நடைபெற்ற சமயப் பிரசங்கங்களை ஒரு காலத்தில் பாமர மக்கள் முதல் படித்தவர்கள் வரை மிகவும் அக்கறையுடன் கேட்டுப் பயன் பெற்றனர். நல்லைநகர் நாவலர் பெருமான் அவர்களால் எம்மண்ணில் தோற்றுவிக்கப்பட்ட சமயப் பிரசங்க மரபினால் மக்கள் சீர்பெற்றனர். சமய மறுமலர்ச்சி ஏற்பட்ட வரலாறு சிறப்பாகப் பேசப்படுகிறது. அன்னை சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சமயப் பிரசங்கத்தால் பல கோவில்களில் கேளிக்கை நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டமை மறக்கமுடியாது. தமிழ் நாட்டிலிருந்து திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் முதல் பல பெரியவர்களை ஈழத்து ஆலயங்களுக்கு அழைத்து அவர்களின் தொடர் விரிவுரைகளைக் கேட்பதற்கு மக்கள் திரண்டு வந்த நாள்களை இன்றைய தலைமுறை அறியாது. கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்களது இராமாயணத் தொடர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்பொழிவுகள் 1995இற்கு முன் யாழ்ப்பாணத்தில் பலஆலயங்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்றது. ஆனால் இன்று ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் சமயப் பிரசங்கம் இடம்பெறுவதில்லை. அதற்கான முக்கியத்துவம் அருகிவருவது வேதனைக்குரியது. ஏனைய சமயத்தவர்கள் தமது சமய வழிபாட்டு நிகழ்வில் போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். மக்களுக்கு ஒழுக்க விழுமியங்களை தமது ஆலயங்களில் மிக முக்கியமாக எடுத்துக் கூறுகிறார்கள். வெறும் கிரியை வழிபாட்டுடன் மட்டும் எமது ஆலய விழாக்கள் நடைபெறுவது பூரணத்துவம் பெறாது. சகல சைவ ஆலயங்களிலும் ஆன்மீக நற்சிந்தனைகள், சமயப் பிரசங்கங்கள் நடைபெற அனைவரும் அக்கறை கொள்வோமாக.

**– ஆசிரியர்**


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

**தொடர்புகளுக்கு**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாமம், ஓருருவம் ஒன்றுமில்லான்

திரு. செ. தனபாலசிங்கன் அவர்கள்

ஸ்ரீநரஹரி என்று ஒரு சிவபக்தர் பண்டரிபுரத்திலே வாழ்கிறார். பண்டரிபுரத்திலே விஷ்ணு வழிபாட்டுக்குக் குறைவே இல்லை. பார்க்குமிடமெங்ஙனும் பரந்தாமனின் பக்திப்பாடல்களாகவே இருக்கின்றன. விஷ்ணு நாமவழிகளைக் கேட்பதற்கு முடியாமல் காதையே பொத்திக்கொள்கிறார் ஸ்ரீ–நரஹரி. மதவெறி, நாளுக்கு நாள் அவரிடத்திலே வளர்கிறது. பண்டரிபுரத்திலே சிவபக்தர் என்ற இறுமாப்புடன் வாழ்கிறார். அவர் காலத்திலே பண்டரிபுரத்திலே வணிகன் ஒருவன் வளமெல்லாம் பெற்று வாழ்கிறான். ஆனால் புத்திரபாக்கியம் கிட்டாததால் அவனும் அவன் மனைவியும் வாடுகிறார்கள். பண்டரிநாதன் சந்நதியிலே இருவரும் மகப்பேற்றுக்குக் காவல் கிடக்கிறார்கள்.

ஆண்டவன் திருவருள் பெருகுகிறது. ஆண் மகவு ஒன்று ஆனந்தமாகப் பிறக்கிறது. பெற்றெடுத்த பெற்றோர் பூரிப்படைகிறார்கள். திருவருளைப் போற்றுகிறார்கள். பண்டரிநாதன் விக்கிரகத்தின் நிறைக்குச் சமனான பொன்னால் அரைஞாண் செய்து, ஆண்டவனுக்கு அணிந்து மகிழ விரும்புகிறார்கள். தம்முடைய அந்த நேர்த்திக்கடனை முடிக்கப் பொன்னரைஞாணைச் செய்யப் புறப்படுகிறார்கள். பக்தர் நரஹரியின் பொன்செய் தொழிலின் வல்லமையை அறிகிறார்கள். பொன்னையும் மணியையும் எடுத்துக்கொண்டு சிவபக்தராம் நரஹரியிடம் வருகிறார்கள். பாண்டுரங்கனுக்கு அரைஞாண் செய்ய முடியாது என்று மறுக்கிறார் நரஹரி. வணிகன் குறை இரக்கிறான். ஒருவாறு இணங்குகிறார்.

“உம்முடைய ஆண்டவனுடைய விக்கிரகத்தின் இடையின் அளவை எடுத்துக்கொண்டு வந்தால் அதற்கேற்ற அரைஞாண் செய்து தருகிறேன். உம்முடைய இறைவனை நான் ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன்” என்று திட்டவட்டமாகச் சொல்லிவிடுகிறார். மறுநாட் காலை விக்கிரகத்தின் இடையின் அளவை வணிகன் கொண்டுவந்து கொடுக்கிறான். அரைஞாண் வேலையும் முடிகிறது. அரைஞாணைப் பெற்றுக்கொண்டு பாண்டுரங்கனின் கோயிலை நோக்கி வருகிறான் வணிகன். பணிந்து எழுந்து அரைஞாணைப் பூட்டுகிறான். அரைஞாண் ஆறுவிரட்கடை போதாமல் இருக்கிறது. வணிகன் திகைக்கிறான். அரைஞாணை எடுத்துக்கொண்டு நரஹரியிடம் ஓடோடியும் வருகிறான். ஆறுவிரக்கடை அளவிலே கூட்டித்தருமாறு கேட்கிறான். அளவைக்கூட்டி அரைஞாணைச் சரிப்படுத்திக் கொடுக்கிறார். வணிகன் பண்டரிநாதன் இடையிலே மறுபடியும் அணிந்து பார்க்கிறான். சில விரட்கடை அளவில் அப்போது அதிகமாய் இருக்கிறதைப் பார்த்து மறுபடியும் ஓடோடி வருகிறான். நரஹரி அளவைக் குறைத்துக் கொடுக்கிறார். எடுத்துச் செல்கிறான் வணிகன். அளவு மறுபடியும் போதாமல் போகிறது. இவ்வாறே அரைஞாண் அளவிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருந்தாமல் குறைவதும் மிகுவதுமாய் இருப்பதைப் பார்க்கிறான் வணிகன். உள்ளம் வெடிக்கிறது.

நரஹரியிடம் மீண்டும் வருகிறான். "ஐயா! நான் அளவு எடுத்ததில் ஏதோ தவறு இருக்கிறது. எம்பெருமான் இடையை ஒரு தரம் தாங்களே வந்து அளவு எடுக்க வேண்டும்" என்று பணிந்து கேட்கிறான் வணிகன். நரஹரிக்கு கோபம் வருகிறது. "என்ன பேசுகிறீர்? உம்முடைய பண்டரிநாதன் கோயிலுக்கு நான் வரவே மாட்டேன். வந்த வழியைப் பார்த்துக்கொண்டு மெல்ல நடையைக் கட்டிவிடும்" என்று சீறி விழுகிறார் நரஹரி.

வசை மொழிகளைப் பொருட்படுத்தாது காலிலே விழுகிறான் வணிகன். கண்கள் இரண்டையும் கட்டிக்கொண்டு கையால் தடவிப் பார்த்து அளவு எடுக்க ஒருவாறு ஒப்புக்கொள்கிறார் நரஹரி. தன் கண்களைக் கட்டிக்கொள்கிறார். இருவரும் கர்ப்பக்கிருகத்தைச் சென்றடைகிறார்கள். விக்கிரகத்தை தடவ ஆரம்பிக்கிறார். பண்டரிநாதனுடைய இடையிலே புலித்தோல் அணிந்திருப்பது அவரது கண்களுக்குப் புலனாகிறது; வியப்படைகிறார். ஒவ்வோர் அங்கமாகத் தடவிப் பார்க்கத் தொடங்குகிறார். மான், மழு, சூலம், அக்கினி, உடுக்கை, கங்கை, அரவமெல்லாம் புலப்படுகின்றன. சிவனல்லவா அங்கே இடம்பிடித்துக் கொண்டான். பாண்டுரங்கனா அல்லது பரமசிவனா இங்கே எழுந்தருளியிருக்கிறான் என்று கட்டிய துணியை அவிழ்த்துப் பார்க்கிறார். சங்கு, சக்கரம், பீதாம்பரம், மணிமுடியுடன் பாண்டுரங்கன் காட்சி தருகிறான். கண்களை இறுக மூடிக்கொள்கிறார். மீண்டும் தடவிப் பார்க்கிறார். சிவபிரான் அணிகலன்கள் அத்தனையும் தெரிகின்றன. கைகளை நம்மாது கண்கட்டை அவிழ்த்து மறுபடியும் பார்க்கிறார். பாண்டுரங்கன் தெரிகிறான். "கண்ணை மூடினால் கைலாசபதி, கண்ணைத் திறந்தால் பரந்தாமன். இது என்ன அற்புதம்" என்று தன்னைத் தானே நம்பாத நிலையில் நிற்கிறார்.

திருவருளால் ஞானம் உதயமாகிறது. "சிவன் வேறு, விஷ்ணு வேறு என்று பிதற்றினேன். இன்று உண்மையை உணர்ந்தேன்" என்று கதறி அழுகிறார். "வணிகன் வாயிலாக உனக்கு நல்ல பாடம் கற்பிக்கும் பொருட்டே உன்னைச் சோதனைக்குள்ளாக்கினோம். எல்லாம் ஒரு பரம்பொருளின் வெவ்வேறு தோற்றங்கள். இவ்வுண்மையை நீ அறிந்து கொள்வாய். தெய்வங்களுக்கிடையிலே பேதம் கற்பிப்பது அறிவுடமையாகாது" என்று பண்டரிநாதன் திருவாய் மலர்ந்தருளுகின்றான். பொன்னரைஞாணும் இடையிலே பொருந்தி விடுகிறது. வணிகனும் வளமெல்லாம் பெற்று வாழ்கின்றான்.

ஆறு வடிவங்களில் ஒரே ஒரு மூர்த்தி :

உண்மையில் பரம்பொருள் ஒன்றே ஒன்றுதான்! ஒருநாமம், ஒருருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுமில்லாத அப்பெருமானுக்கு ஆயிரம் திருநாமம் பாடிப்பாடிப் போற்றுகிறோம். ஆண்டவனுக்கு நாம் கற்பிக்கும் சொரூபத்துக்கு ஏற்றவாறு பெயர் மாறி அமைகின்றது. நாம் அனுஷ்டிக்கும் சமயத்துக்கும் பெயர் மாறி அமைகின்றது.

நம்மாழ்வார் திருமணிவண்ணன்மேல் இருந்த முறுகிய பக்தியினாலே பல மதங்களில் பூஜிக்கப்படும் எல்லாதத் தெய்வங்களும் அந்தராத்மா பகவான் நாராயணனே என்று பாடுவார். "எந்தத் தெய்வத்தை ஆராதித்தாலும் அது நாராயணனையே சென்று சேரும். இலிங்க புராணத்தைப் பிரமாணமாக உடையவரும், சமணரும் பௌத்தரும் தீவிர உணர்ச்சியுடன் வாது செய்கின்ற எல்லாச் சமயத்தவரும் வழிபடும் தெய்வங்கள் பகவான் நாராயணனே இது சத்தியம்" என்று சத்தியமே செய்கின்றார். அது அவரின் பக்தி நிலை! அவரின் பாடலையும் நாம் படியாமல் இருக்கமுடியாது.

"இலிங்கத் திட்ட புராணத் தீரும் சமணரும் சாக்கியரும்
வலிந்து வாதுசெய் வீர்களும் மற்றுநம் தெய்வமுும் ஆகிநின்றான்
மலிந்து செந்நெல் கவரி வீசும் திருக்குரு கூர்அதனுள்
பொலிந்து நின்றபி ரான்கண்டீர் ஒ்னறும் பொய்இல்லை போற்றுமினே".

ஆறு சமயங்களும் மற்றும் வேறு சமயங்களும் ஆதிப்பிரானை அளந்து பார்க்கின்றன. ஆனால் அவற்றால் அது முடியாத காரியம். சாஸ்திர ஞானத்தினாலும் எழுகின்ற தர்க்கங்களினாலும் பயன் எதுவுமே இல்லை. சமய பேதங்களைப் பொருட்படுத்தாமல் எல்லாத் தெய்வங்களுக்கும் பொதுவான அந்தர்யாமி ஆதிநாராயணனே என்று அமைவது நல்லது என்றல்லவா ஆழ்வார் உபதேசிக்கிறார்.

"விளம்பும் ஆறு சமயமும் அவை ஆகியும் மற்றும் தன்பால்
அளந்து காண்டற்கு அரியன் ஆகிய ஆதிப் பிரான்அமரும்
வளம்கொள் தண்பணை சூழ்ந்து அழகு ஆய திருக்குரு கூர்அதனை
உளம்கொள் ஞானத்து வைம்மின் உம்மைஉய் யக்கொண்டு போகுறிலே".

சைவம், வைஷ்ணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் என்ற ஆறு சமயங்களும் ஒரு மூர்த்தியையே ஆறு வடிவங்களில் உபாசித்து வருகின்றன.

"ஈசுவரனுடைய நாமங்கள் அனந்தம்; அவனை அடைவதற்குச் சாதகமாக ஏற்பட்ட ரூபங்களும் அனந்தம்; நீ எந்த நாம ரூபத்துடன் அவனை வழிபடுகின்றாயோ அந்த நாமரூபத்துடனேயே அவனுடைய காட்சியைப் பெறுவாய்" என்று ஸ்ரீ இராமகிருஷ்ணர் சொல்லுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதவாதிகளுக்கிடையிலே இறைவனைப் பற்றிய தவறான கொள்கை இருந்து வருகிறது. அதாவது வெவ்வேறு மதத்திற்குரிய தெய்வம் வெவ்வேறு உண்டு என்று கருதுகிறார்கள். இதனால் தெய்வங்கள் பல என்ற கருத்தும் மக்களுக்கிடையில் வேரூன்றிவிடப் பார்க்கிறது. உண்மையைச் சொல்லப்போனால் மக்களின் இயல்புக்கு ஏற்ப மதங்கள் பலவற்றைத் தோற்றுவித்து அவையெல்லாவற்றுக்கும் நடுநாயகமாக எம்பிரான் விளங்குகின்றான். இதனை அறிந்தவர்களே கடவுளின் தத்துவத்தை அறிந்தவர்கள்.

"மதங்கள் தோறும் நின்ற குருவே"

என்று ஆண்டவனைப் பாடுவார் தாயுமானவர். ஈசுவரனை வழிபடுகின்ற பக்தனுடைய மனப்பான்மை அல்லது அந்தக்கரண தத்துவம் எத்தகையதோ அதற்கு ஏற்றவாறு இறைவனை அவன் பொருட்படுத்துகின்றான். இக்காரணத்தினாலேயே ஏகமாய் உள்ள பரம்பொருள் பற்பல தெய்வங்களாகத் தென்படுகின்றது. இவ்வாறே தென்படுகின்ற ஒவ்வொரு தெய்வமும் தமக்கே அலாதியாய் உள்ள குணவிசேசங்கள் படைத்ததாகத் தோற்றுகிறது. மாணிக்கவாசகர் பாடுவார்:

"திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ."

இறைவனுக்கு வடிவைக் கொடுத்து ஆயிரமாயிரம் திருநாமத்தையும் கொடுக்கிறான் பக்தன். கடவுளுக்கு மெய்ப்பொருள் என்பது ஒரு பெயர். உண்மையில் அவருக்கு எப்பெயரும் பொருந்தாது. ஒருநாமம், ஒருருவம் ஒன்றுமில்லாத இறைவனுக்கு ஆயிரம் திருநாமமும் அவற்றுக்கு மேலும் ஆன்றோர் வழங்கியிருக்கிறார்கள். அத்தனை நாமங்களும் அப்பெருமானுக்குப் பொருத்தமானவையே. மும்மூர்த்திகள் வேறு, பரப்பிரம்மம் வேறு அன்று. கடவுள் ஒருவரே. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டிருக்கும் பொழுது அவர் மும்மூர்த்திகளாகச் சொல்லப்படுகிறார். செயல்களைக் கடந்த நிலையில் அவர் பரம்பொருளாக விளங்குகிறார். இதை தாயுமானவர்

"மைவிடா தெழுநீல கண்டகுரு வேவிஷ்ணு
வடிவான ஞான குருவே
மலர்வே மறையோது நான்முகக் குருவே"

என்று அழகாகப் பாடுவார்.

உய்வு அடை ஒரு கோட்பாடு :

ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சர் சொல்கிறார் : "ஒரு மனிதன் எம்மதத்தைச் சேர்ந்திருக்கிறான் என்பது முக்கியமானதன்று; தான் விரும்புகிற எந்த மதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமானாலும் ஒருவன் சேர்ந்திருக்கலாம். ஒருவன் உய்வு அடைவதற்கு மதச் சார்பை விட முக்கியமான கோட்பாடு ஒன்று உண்டு. அவனுடைய உள்ளத்தில் கடவுள் வழிபாடு சம்பந்தமாக நேர்மையும் ஊக்கமும் நிறைந்திருக்கவேண்டும். ஒருவனுடைய மனநிலை எத்தகையது என்பதையே கடவுள் கணக்கில் எடுத்துக் கொள்கிறார். அவன் எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்பதைக் கடவுள் பொருட்படுத்துவதில்லை. உலகிலே பல சமயத்தவர் இருக்கின்றனர். சைவர்கள் இருக்கிறார்கள். வைஷ்ணவர்கள் இருக்கிறார்கள். சாக்தர்கள் இருக்கிறார்கள். வேதாந்திகள் இருக்கிறார்கள். இஸ்லாமியர்கள் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஜைனர்கள் இருக்கிறார்கள். பௌத்தர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பரத்தைச் சார்வது சாத்தியம். இதில் ஐயம் ஒன்றுமில்லை. இவர்கள் எல்லோருக்கும் தேவையாய் இருப்பது ஒன்றே! அன்பும் நேர்மையும் ஊக்கமும் வாய்க்கப்பெற்ற மனமுடையவர்களாய் இருப்பார்களாகில், அவர்கள் எல்லோர்க்கும் விமோசனம் உண்டு. சமயப் போர் புரிகின்ற சழக்கர்களை ஆங்காங்கு காணலாம். நாங்கள் வணங்கும் கிருஷ்ணனைப் போற்றாதவர்களுக்குப் பரகதி இல்லையென்று வைஷ்ணவர்கள் போராடுவார்கள். நாங்கள் போற்றும் பராசக்தியை உபாசிக்காதவர்களுக்கு உய்வு இல்லை என்று சாக்தர்கள் செப்புவார்கள். சிவத்தை வணங்காதவர்களைக் கண்டால் அஞ்சுவது போன்று அஞ்சுவதற்கு வேறு ஓர் உயிரில்லையென்று சைவர்கள் பேசுவார்கள். பரலோகத்திலிருக்கும் பிதாவின் ஏகபுதல்வராகிய ஏசுநாதரன்றி உலகத்தவரைக் காக்கும் கர்த்தா வேறு யாருமில்லை என்று கிறிஸ்தவர்கள் கூறுவார்கள். பெரிய பொருளாகிய அல்லாவைப் போற்றாதவர்கள் எல்லோரும் செத்தவர்களுக்கு ஒப்பாவார்கள் என்று இஸ்லாமியர்கள் சொல்வார்கள். மதவாதிகளைப் பிடித்திருக்கும் மதவெறி இதுவேயாகும். நல்லான் ஒருவனுக்கு இத்தகைய மனநிலை ஒருபொழுதும் ஒவ்வாது. எந்த மார்க்கத்தின் மூலமாக வேண்டுமானாலும் மாந்தர் பரம்பொருளை அடையலாம்.

தோழிக்குத் தலைவி சொல்வது போல நமக்குச் சொல்கிறார் இராமலிங்க அடிகளார் அவர் தம் தீந்தமிழ் பாடல்கள் இதோ :

“பெருகியே ரருளுடையா ரம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை என் கணவர் திருப் பேர்புகலென் கின்றாய்
அருகர்புத்த ராதியென்பேன் அயனென்பேன் நாரா
யணனென்பேன் அரனென்பேன் ஆதிசிவ னென்பேன்
பருகுசதா சிவமென்பேன் சக்திசிவ மென்பேன்
பரமென்பேன் பிரமமென்பேன் பரம்பிரம மென்பேன்
குருவுசுத்த பிரமமென்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவ மென்பனிவை சித்துவிளை யாட்டே”.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ வென்றாய்
சிற்சமயத் தார்பெயரு மவர்பெயரே கண்டாய்
பித்தரென்றே பெயர்படைத்தார்க் கெப்பெயரொவ் வாரோ
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயரென் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயருமவர் பெயரே
சிற்சபையி லென்கணவர் செய்யுமொரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளியுமிது தோழி".


பகவத் கீதை ஏழாம் அத்தியாயம் இருபத்தோராவது சுலோகத்திலே கண்ணன் சொல்கிறார் : "எந்த எந்தப் பக்தன் நம்பிக்கையுடன் எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகின்றானோ அவனவனுடைய அசையாத நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்கின்றேன்".

அப்பர் பெருமான் தேவாரத்திலே பாடுவார் :

'ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூ ரமர்ந்தஅம் மானே".

கடவுள் ஒருவரே; அவரே மூன்று தொழிலுக்கும் மூல காரணர் என்று கம்பரும் கடவுள் வாழ்த்துப் பாடலில் பாடுகிறார். இதோ அந்தக் கடவுள் வாழ்த்து.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே."


தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய வடக்கு கோபுர அடிக்கல் நாட்டு வைபவம் 30-06-2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர்

அம்மா உயிருடன் இருந்திருந்தால்.... ஆம்! அவர் பத்து வருடம் திடமாக இருந்திருக்கலாம். விதி யாரைவிட்டது. விழுந்ததால் முறிந்த எலும்பு பொருந்தியபின் வைத்தியர்களும் ஏனையோரும் "அம்மாவுக்கு இனி ஒரு குறையும் இல்லை, பழைய நிலைக்கு வந்துவிட்டார்" என்று திருப்திப்பட்டநிலையில் "இடது முழங்கையில் இருந்த சிறிய கல்சியப்படிவால் வந்த மேட்டினை அகற்றிவிடவேண்டும் என்று பிடிவாதம் பிடித்து சத்திரசிகிச்சைக்கு வலியுறுத்தி மீண்டும் வைத்தியசாலை சென்றவர். சத்திர சிகிச்சையின்போது ஏற்பட்ட மயக்கத்தில் இருந்து மீளாமலே போய்விட்டார் என்பது தான் கொடுமையான உண்மை. இன்றுவரை மறக்கமுடியாத அந்தக்கொடுமை விதி அதுதான்.

ஒருமுறை பேராசிரியர் சிவத்தம்பி ஐயா வந்திருந்தார் (கார்த்திகேசு சிவத்தம்பி) வந்தபோது அவர் கூறிய வார்த்தைகள் "அம்மா! உங்கள் வாழ்வு சாதாரணமானது அல்ல. அது ஆவணப்படுத்தப்படவேண்டிய ஒரு சரித்திரம். உங்கள் அருகில் இருக்கிற யாரையாவது கொண்டு உங்கள் வாழ்வு நிகழ்வுகள் எல்லாம் சரியாகப் பதியப்படவேண்டும். நீங்கள் அவற்றைச் சொல்வது மட்டுமல்லாமல் எழுதியதை உடனுக்குடன் சரி பார்க்கவும் வேண்டும். மறந்துவிடாதீர்கள். இது என்னுடைய விருப்பம் மட்டுமல்ல, காலத்தின் தேவையும் கூட".

ஆம், அம்மாவின் வாழ்வு அருமையான ஒரு கவிதை போன்ற சரித்திரம். பலர் பல கோணங்களில் தாங்கள் அறிந்த – அறிந்தபடி எழுதியிருக்கிறார்கள். ஆனால் முழுமையான அந்தச் சரித்திரத்தின் பெரும்பகுதி இன்னும் சொல்லப்படாமலேயே உள்ளது.

இங்கும், அவரது வாழ்வின் ஒரு சில காட்சிகளை மட்டும் ஒரு புகைப்படம் போல் மனதில் பதிந்தவையில் இருந்து எடுத்துக்காட்டலாம் என்ற எண்ணம்.

அவர் தமது அறுபது வயது வரை ஆடம்பரமான ஆடை, அலங்காரம், மிகையான ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்திருந்தார். எளிமையான சில்க் சேலை ஒரு வெள்ளை ரவிக்கை, கைகளில் ஒரு வளையல், காதில் தோடு, கழுத்தில் மெல்லிய சங்கிலி, விசேட நிகழ்வுகளின் போது அவருக்கு அவரது மாணவி ஒருவர் அன்பளிப்பாக வழங்கிய பவுண் கட்டிய உருத்திராக்க மாலையை அணிவதுண்டு. முகத்தில் பட்டும் படாத சிறு பவுடர் பூச்சு. நெற்றியில் எப்போதும் துலங்கும் விபூதி, குங்குமப் பொட்டு – மாறாத எப்போதும் சிரித்து மலர்ந்த புன்னகை. இவைதாம் அவரது அலங்காரம்.

ஊதா, இளம் ஊதா நிற சேலைகளையும் சாம்பல் அவரது பாஷையில் வெங்காயக் கலர் சேலைகளையும் அணிய விருப்பம். அறுபது வயதுக்குப் பின்னரே சரிகைக் கரையிட்ட பட்டுச் சேலைகளை அணியத் தொடங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில் குளித்தவுடன் அணியும் உடைகளை இரவே எடுத்துத் தயாராக வைத்துவிடவேண்டும். அந்தக் கடமையை முன்பு ரதிதேவி செய்துவந்தார். பின் மஞ்சுளா பொறுப்பேற்றார்.

உணவில் மிகவும் கண்டிப்பும், ஒழுங்கும் உடையவர். மிகக் குறைந்த அளவே உண்பார். காலையில் இரண்டு இடியப்பம் சொதி அல்லது ஒரு கரண்டி பிட்டு, முருங்கை இலை போட்டு வைத்த சொதி விருப்பம். பிற்காலத்தில் ஒரு சிறு கிண்ணம் சிவப்பரிசிக் கஞ்சித் தெளிவு மட்டும் சாப்பிடும் வழக்கம் இருந்தது.

மதியம் மிகக்குறைந்த அளவு சோறு, ஏதாவது இலைக்கறி, பருப்பு, சொதி அல்லது இரசம் சிறிதளவு எடுத்துக் கொள்வார். ஆனால் சமைக்கப்பட்ட அத்தனை கறிகளும் மேசையில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். சிறு சிறு கிண்ணங்களில் மூடிவைத்துள்ள அனைத்தையும் திறந்து கவனிப்பார். சிலவேளை சிலவற்றை சுவைத்துப் பார்த்து ஏதாவது குறை என்றால் சமையலுக்குப் பொறுப்பானவர்களை மிகவும் கண்டிப்பார். பிள்ளைகளுக்கு நல்ல உணவு கொடுக்க வேண்டும் என்பதில் மிகுந்த கவனம் எடுப்பார்.

அதேபோல பிள்ளைகளின் உடையிலும் மிகவும் கவனம் செலுத்துவார். சுத்தமாக – மிக்க கண்ணியமாக உடுத்துவதையே விரும்புவார். உடை தைக்கும்போது சீருடை, கவுன் என்பவை முழங்காலுக்குக் கீழே நிற்கவேண்டும். உடையை இறுக்கமாக வைக்கக்கூடாது. பாவாடை கால்முட்ட நிற்கவேண்டும். மேற்சட்டையில் கழுத்து பெரிதாக, இறக்கமாக இருக்கக்கூடாது. கவர்ச்சியாக ஆடை அணியக்கூடாது. கறுப்பு உடைகளை அணியவே கூடாது. மிகப்பகட்டான உடைகளை அணியக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறுவார். வருடம் ஒருமுறை அம்பாளுடைய பட்டுகள் பிள்ளைகளுக்கு பாவாடையாக தைத்துக் கொடுக்கப்படும்.

பிள்ளைகள் விரதம் பிடிப்பது அவருக்கு விருப்பம் இல்லை. அம்பாளை வடிவாகக் கும்பிடுங்கள். அவா உங்களுக்கு வேண்டியதெல்லாம் தருவா. விரதமிருந்து, பட்டினி கிடந்து விரதம் பிடி என்று அவ சொன்னாவோ? என்று கேட்பார். ஆனால் புரட்டாதிச் சனி விரதம் வளர்ந்த பிள்ளைகள் எல்லோரும் பிடிப்பதை ஒத்துக்கொள்வார். மூன்றாம் சனிக்கிழமை கீரிமலைக்கு எல்லோரையும் கூட்டிச் சென்று அர்ச்சனைகள் செய்யவும் விளக்கேற்றவும் உதவுவார். நகுலேஸ்வரம் போகமுடியாமற்போன காலங்களில் இடப்பெயர்வின் போது வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலுக்குக் கூட்டிச் செல்வார்.

ஆடி அமாவாசை நாட்களில் தகப்பன் இல்லாத பிள்ளைகள் விரதம் பிடிக்க ஊக்கப்படுத்துவார். சித்திரா பௌர்ணமியில் தாயை இழந்த பிள்ளைகள் விரதமிருப்பதை அனுமதிப்பார். ஆனால் பதினொன்று பதினொன்றரைக்குள் பகல் உணவு கொடுக்கவேண்டும் என்று பணியாளருக்குக் கட்டளை இடுவார். சரியாக பதினொன்றுக்கு எங்கே இருந்தாலும் சாப்பாட்டு மண்டபத்தில் வந்து இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார். பிள்ளைகள் "பாறணை" செய்த பின்தான் நான் சாப்பிடுவன் என்றவாறு மதிய உணவை உண்பார்.

1992ற்கு முன் தினசரி காலை, மாலையில் இல்லத்திற்கு வருகை தருவார். சுத்தம் மிகக் கவனிப்பார். மேற்பார்வையாளர்களுக்கு சில அறிவுரைகள், பணிப்புரைகள் இராமநாதன் கல்லூரியில் இருந்த காலத்தில் பிள்ளைகளின் இடத்திலேயே ஒரு அறையில் தங்கியிருந்ததால் காலையோ மாலையோ எந்நேரத்திலும் கதவு வழியாக பிள்ளைகளின் இருப்பிடத்தை அவதானிப்பார். அவரது பார்வையில் இருந்து எந்தச் சிறுதவறும் எந்தச் சிறு அணுவும் தப்பமுடியாது. கண்டிப்போ பாராட்டோ உடனடியாகக் கிடைக்கும்.

பிள்ளைகளுக்கு ஏதாவது சுகயீனம் என்றால் பதறிப்போவார். உரிய நடவடிக்கை எடுப்பதில் மிகவும் அக்கறை காட்டுவார். "மருந்து ஒழுங்காகக் கொடுபட்டதா? பிள்ளைக்கு என்ன சாப்பாடு கொடுத்தீர்கள்? என அடிக்கடி விசாரிப்பார். சிலவேளைகளில் தாமே நேரில் வந்து கவனிப்பார். இரவில் விழிக்கும் போதும் உடனே தமது கையால் தேநீர் தயாரித்து அருகில் படுத்திருக்கும் பிள்ளையை எழுப்புவார். "ஆச்சி அந்தக் காய்ச்சல்காரப் பிள்ளைக்கு எப்படியிருக்கு? காய்ச்சல் விட்டுட்டுதா" என்று பார்த்துக்கொண்டுவா" என அனுப்புவார். பிள்ளை திரும்பி வரும்வரை காத்திருந்து "தேத்தண்ணியைக் குடிச்சாவோ? எப்படி இருக்கிறா? காய்ச்சல் விட்டுட்டுதா? என்றெல்லாம் கேட்ட பின்தான் அவர் படுப்பார்.

1987, 1988, 1989களில் இல்லப் பிள்ளைகளிடையே வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளை மிகச் சிறப்பாக நடாத்தி வந்தார். சிறந்த பயிற்றுவிப்பாளர்களைக் கொண்டு பிள்ளைகளுக்கு நல்லமுறையில் விளையாட்டுக்களைப் பயிற்றுவித்து பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் போன்று மிகவும் சிறப்பாக நடைபெற வழிவகுத்தார். ஓர் உயர்தரக் கல்லூரியின் விளையாட்டுப் போட்டிபோல மிகச் சிறப்பாக நிகழ்வுகள் அமைந்தன. அம்பிகை ஆலயத்தின் தெற்கு வீதியும், கிழக்கு வீதியும் மைதானம் போல் உதவின. இல்ல அலங்காரம், விநோத உடைப்போட்டிகள் மிக உயர்தரமாக அமைந்தன.

போர் மேகம் சூழ்ந்தநிலையில் அந்த நிகழ்வுகள் கைவிடப்பட்டாலும், பிள்ளைகளின் பாடசாலைக் கல்வி, கைத்தொழிற் பயிற்சிகளில் எந்தத் தொய்வும் ஏற்படாமல் கவனித்துக் கொண்டார். யூனியன் கல்லூரிக்குச் செல்லமுடியாமல் ஏற்பட்டதால் மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் பிள்ளைகள் சேர்க்கப்பட்டு கல்வி தொடர்ந்தது. இடம்பெயர்ந்து சென்று இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தங்கியபோது அனைத்துப் பிள்ளைகளும் இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்றனர். உசனுக்கு இடம்பெயர்ந்த போது உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் கற்கத் தொடங்கினர். இடையில் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் சில மாதங்கள் தங்கியபோது சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் சேர்க்க ஒழுங்கு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உடனடியாகவே உசனுக்கு இடம்பெயரவேண்டி ஏற்பட்டது. அதனால் மகளிர் கல்லூரி செல்லும் வாய்ப்பு எமது பிள்ளைகளுக்குக் கிடைக்கவில்லை.

துர்க்காபுரம் மகளிர் இல்லம் 1992 முதல் 2000 வரை எட்டு இடப்பெயர்வுகளைச் சந்தித்தது. ஒவ்வொரு இடங்களிலும் இடப்பெயர்வின் போது செல்லும் இடத்தை உறுதிப்படுத்துவது, எப்படிச் செல்வது என்னென்ன எடுத்துச் செல்வது என்பதை உடனடியாகவே தீர்மானித்து தாமே முன்னின்று வழிநடத்திச் சென்று கூடவே இருந்து காத்துக் கொண்டார். அம்மா எந்தவேளையிலும் பதட்டமோ, குழப்பமோ, தடுமாற்றமோ, தேவையற்ற எரிச்சல் குணங்களோ அவரிடம் தலைகாட்டியதில்லை. மிக நிதானமாக அந்த வேளையில் இல்லப் பிள்ளைகளையும், பணியாளர்கள், பாதுகாப்புத் தேடிவந்தவர்கள் அனைவரையும் அம்பாளின் அருளையும், தமது மனோபலத்தையும் துணையாகக் கொண்டு தாய்ப்பறவை குஞ்சுகளைப் பாதுகாப்பது போல் பாதுகாத்துக்கொண்டு வந்து மீண்டும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் சேர்த்ததும் அவரது அசையாத மனோதர்மம் (வாத்சல்யம்) வாஞ்சை கடமையிலிருந்த உறுதிப்பாடு வியப்புக்குரியது, ஈடு இணையற்றது. எந்த நேரத்திலும் மகளிர் இல்லத்தைத் தமது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று பெண் பிள்ளைகளுக்கு அளிக்கவேண்டிய சடங்குகளையும் இவர் ஆற்றத் தவறவில்லை. பூப்புனித நீராட்டுவிழா, திருமணச் சடங்கு ஆகியவற்றையும் தாயின் ஸ்தானத்தில் இருந்து மிகவும் சிறப்பாக நடாத்தி வைத்தார். பெற்றோர் இருவரையும் இழந்து ஆதரவுக்கரம் நீட்ட இல்லாத பெண்பிள்ளைகள் அனைவரினதும் வாழ்வியல் சடங்குகளை முன்னிற்று நடத்திய சிறப்பும் அம்மையாருக்கு உண்டு.

தமக்கு "கலாநிதி"ப்பட்டம் கிடைத்த அன்று பிள்ளைகளுக்கு விசேட சிற்றுண்டிகளுடன் ஒரு கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இராமநாதன் கல்லூரி வகுப்பறை ஒன்றில் அக்கூட்டம் நடைபெற்றது. அதில் வந்து முதலாவதாக அமர்ந்தவர் அம்மாதான். பிள்ளைகள் வந்து கூடியபின் அவர்களுக்கு அவர் ஒரு உரையாற்றினார். மிகச்சிறு உரைதான் அது. அதில் கூறியதன் சாரம் பின்வருமாறு,

"இன்றைக்கு எனக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் தந்து கௌரவித்துள்ளது. அதற்குக் காரணம் என் அன்புப் பிள்ளைகள் நீங்கள் தான். உங்களால்தான் எனக்கு இந்தக் கௌரவம் கிடைத்தது. அதனால் நான் உங்களுக்கு நிறைந்த நன்றி உள்ளவளாவேன். எனது நன்றியை உங்களுக்கு இப்போது தெரிவிக்கிறேன். நீங்கள் நல்லொழுக்கம் மிக்க கல்வியில் உயர்ந்து வரவேண்டும். அதையே மீண்டும் உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன். வெகு ஆனந்தமாக அந்தப் பொழுதைப் பிள்ளைகளுடன் சிற்றுண்டி அருந்திக் களித்தார் அம்மா. அடுத்தநாள் அவர்களுடன் புகைப்படங்களும் எடுத்துக் கொண்டார்.

அலையே வீசாத ஆழ்கடல் போன்றது அம்மாவின் இயல்பு. சைவசமயத்தில் ஆழ்ந்த பற்று, தேவார, திருவாசகம், பன்னிரு திருமுறைகளில் அவருக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடமில்லாத பகுதியே இல்லை. சைவசித்தாந்தத்தில் தெளிந்த அறிவு, சித்தாந்த சாத்திரங்கள், திருவருட்பா தாயுமானவர் பாடல், காரைக்கால் அம்மையாரின் சரித்திரம் என்பவற்றில் நிறைந்த தெளிவு, மனப்பாடம் கிறிஸ்தவம், இஸ்லம் மார்க்க அறிவும் அதிகமாகக் காணப்பட்டன. ஆரம்பத்தில் மட்டுநகர் சென் சிசிலியாவில் படிப்பித்தபோது கிறிஸ்தவ சகோதரிகளுடன் நன்கு பழகி அம்மதத்தின் நுட்பங்களை அறிந்தனர். பின்பு கொழும்பில் படிப்பித்த முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு மனம் கவர்ந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்.

இதனால் சமய சமரசம் அவரிடம் நிறையவே இருந்தது. ஆயினும் மதம் மாற்றப்படுவதை அவர் ஏற்பதில்லை. பேராயர் அம்பலவாணர், பேராயர் ஜெபநேசன் அடிகளார் போன்ற இன்னும் பல கிறிஸ்தவப் பெரியார்கள் அம்மாவிடம் மிகுந்த அன்பும், மதிப்பும் கொண்டிருந்தனர். அம்மாவும் அப்படியே. பிறமதத் தலைவர்களை மிக மதித்துக் கௌரவிப்பது அவரின் இயல்பு. அவரது பிறந்த நாளில் எல்லா மதத் தலைவர்களும் விரும்பி வந்து கலந்து கொள்வார்கள். மனம் நிறைந்து பாராட்டுவார்கள். அவர்களும் விழா எடுக்கும்போது அம்மாவை அழைத்து உரையாற்றி மகிழ்வர்.

தனது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் எண்ணங்களிலும் தூய்மையுடையவராக விளங்கி சமூகத்திற்குப் பல வழிகளிலும் உதவி ஒரு மனித நேயம் மிக்க பங்காளியாக, ஆத்மீக வாதியாக, வழிகாட்டியாக விளங்கியவர் அம்மா என்றால் மிகையில்லை.

**திருமதி. தவனேஸ்வரி B.A. (Hons)**
ஆசிரியர்
( பழைய மாணவி, துர்க்காபுரம் மகளிர் இல்லம் )

## மாணிக்கவாசகர் குருபூசை
## ஆனி மகம் - 28-06-2017



**ஊழி மலி திருவாதவூரர்**
**திருத்தாள் போற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னருமை ஆசான் திரு. ச. விநாயகரத்தினம்

ஆசிரியமணி திரு ச. விநாயகரத்தினம் அவர்கள், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில், சமய ஆசிரியராக எனக்கு அறிமுகமானார். ஆனால் அவருக்கு பல துறைகளில் ஆழ்ந்த அறிவும், அனுபவமும் உண்டு என்பதுவும், ஆசிரியர் என்பதற்கப்பால் சிறந்த செயல் வீரர் என்பதுவும் பின்பு தான் என்னால் உணர முடிந்தது. மாணவர்கள் ஏட்டுச் சுரைக்காய்களாய் இல்லாமல், அற விழுமியங்களுடன், ஆளுமையுடன், இனிய பண்புடன் வாழ்க்கை நடத்த வழிகாட்டி ஆக இருந்தவர். மாணவர்களின் பன்முகத் திறமைகளை இனங்கண்டு , அவற்றை வளர்த்தெடுத்த பெருமை இவ்வாசிரியரையே சாரும் என்பதை, உலகெங்கணும் வாழும் அவரது மாணவர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசிரியர் பாட வேளைகளில் , அரச பாடத் திட் டத்தில் உள்ள சைவ சமயம் கற்பித்து விட்டு, பின்பு தேவார, திருவாசக, திருமுறைகளையும், திருக்குறளையும் மனனம் செய்யும்படி கூறுவார். பாடசாலை இடைவேளையின் போது, பாடசாலையில் அமைந்துள்ள சிவகாம சுந்தரி சமேத ஆனந்த நடராசர் கோவிலின் பக்கத்தில் உள்ள அறையில் அமர்ந்திருப்பார். மாணவர்கள் ஒவ்வொருவராகச் சென்று, மனனம் செய்த திருமுறைகளையும், திருக்குறளையும் கூறுவார்கள். ஆற்றொழுக்காக எவ்வித பிழைகளும், தடங்கலுமின்றிக் கூறும் மாணவர்களின் அப்பியாசப் புத்தகத்தில் "விம்" என சிவப்பு மைப்பேனாவினால் அழகாக கையெழுத்து இட்டுக் கொடுப்பார். தனது பெயரின் முதலெழுத்தான "வி" யும், இறுதி எழுத்தான "ம்" என்பதையும் சேர்த்தே அவரது கையெழுத்து அமைந்திருந்தது. ஆசிரியரின் தன்னலமற்ற அந்த அரு முயற்சியால், இன்று பல மாணவர்கள் தேவார திருமுறைகளை எந்த இடத்திலும் பாராயணம் செய்யக் கூடிய நிலையில் இருக்கின்றனர். இது ஆசிரியரின் சமய பணிக்கு ஓர் சிறிய எடுத்துக்காட்டு.

திருமுறைகள் ஓதும் போதும், பாடவேளைகளில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடை பகரும் போதும், பரீட்சை விடைத்தாள்களை திருத்தும் போதும், மாணவர்களை மதிப்பிட்டு, தரமான மாணவர்களை ஆசிரியர் தேர்ந்தெடுப்பார். அவர்களை விவேகானந்த சபை, சைவபரிபாலன சபை, கலாஜோதி சனசமூக நிலையம், சாந்தையர்மடம் கற்பக விநாயகர் ஆலயம் , சிவநெறிக் கழகம் போன்றவை நடத்தும் சமய போட்டிகளில் பங்கு பற்றச் செய்வார். அநேக மாணவர்கள் போட்டிகளில் வெற்றி பெற்று, தமக்கும், பாடசாலைக்கும் பெருமை தேடிக் கொண்டனர். ஆசிரியரிடம் கல்வி பயின்ற பல மாணவர்கள் தங்கப் பதக்கம் பரிசாகப் பெற்றனர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. பல மாணவர்கள் பரிசுகள் பெறுவதற்காகப் பல ஆலயங்களுக்குச் சென்று, புராதன ஆலயங்களையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றனர். அடியேனும் பாடசாலை நாட்களில் பரிசு பெறுவதற்காகச் சென்று , திருக்கேதீஸ்வரம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலேசுவரம், சந்தையார்மடம் கற்பக விநாயகர் ஆலயம், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் போன்ற கோவில்களைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்.

பாடசாலை காலத்தில் , ஆலயம் சம்பந்தப் பட் ட வேலைத் திட்டமொன்றை ஆசிரியர் என்னிடம் ஒப்படைத்தார். நானும் பொறுப்பேற்று, சிறு சிறு பிரிவுகளாக அதனைப் பிரித்து, ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு நண்பியிடம் ஒப்படைத்தேன். அடுத்த நாள் ஆலய பூசையின் பின் , அத்திட்டத்தைப் பற்றி விசாரித்தார். நான் இன்ன இன்ன மாதிரி வேலை களை பிரித்து இன்னின்னாரிடம் கொடுத்திருக்கிறேன் என்று கூறினேன். ஒரு வேலையை , அதற்கு தகுதியற்ற ஒருவரிடம் ஒப்படைத்துள்ளேன் எனச் சுட்டிக் காட்டிய ஆசிரியர்,

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்"

என்ற குறளையும் விளக்கினார். என்னுடைய சிறிய வயதிலேயே எப்படிப் பொறுப்புகளை ஏற்று நடப்பது, யாரிடம் காரியங்களை ஒப்படைப்பது என்பவற்றை செய்முறையாக விளங்க வைத்தவர் என்னருமை ஆசான் திரு ச. விநாயக ரத்தினம் அவர்கள். அதனால் தான் இன்றும் தொழில் துறையில் பலதரப் பட்டவர்களுடன் சேர்ந்து வேலை செய்யக் கூடிய தகுதியும் ,திறமையும் உள்ளவராய், குழுக்களில் தலைமை தாங்கவும், உறுப்பினராக சேர்ந்து செய்யவும், தகுதி உடையவராய் திகழ்கிறோம்.

சமய தீட் சை பெற்று, சைவ வாழ்வு வாழும் நன் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, பாடசாலை வளாகத்தில் உள்ள சிவகாமசுந்தரி சமேத ஆனந்த நடராஜப் பெருமான் ஆலயத்தில் , விளக்கு மினுக்குதல் , அடுக்குத் தீபத்திற்கு திரி போடுதல், பூமாலை கட்டுதல், பட்டு மடித்துக் கொடுத்தல், மணி அடித்தல் போன்ற சரியைத் தொண்டுகளை செய்ய வைப்பார். எமது பாடசாலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் 17ம் திருவிழா செய்வது வழமை. அன்று சைவாசார முறைப்படி வாழும் மாணவர்களை அதிகாலையிலேயே ஆலயத்திற்கு வரவழைத்து, தோரணம் போடுதல்,பூமாலை கட்டுதல், வாகனம் காவுதல், தீவர்த்தி பிடித்தல், கற்பூரச் சட்டி எடுத்தல், திருமுறை ஓதுதல் போன்ற புண்ணிய கைங்கரியங்களில் ஈடுபடுத்துவார். திருவிழா முடிந்த பின்னர், இம்மாணவர்களிற்கு சண்முகார்ச்சனையில் வைத்த அறுவகைப் பிரசாதங்களும் கிடைக்கும். சிறுவயதிலே இவ்வண்ணம் தொண்டு செய்த மாணவர்கள் , கடல் கடந்து வெளிநாடு சென்றும் , அங்கும் ஆலயத் திருத்தொண்டு செய்கிறார்கள் என்பதும் நினைவிற் கொள்ளத் தக்கது.

யாழ்ப்பாணத்து கந்த புராணக் கலாசாரத்தைப் போற்றி வளர்த்தவர் எம் ஆசான். சைவத்தையும் , சைவ சித்தாந்தக் கொள்கைகளையும், போற்றிப் பாதுகாத்து , தானும் கடைப் பிடித்தவர். "இந்து" என்ற சொல் இருக்கின்ற எந்த நிறுவனத்திலும் அங்கத்துவம் வகிக்க முடியாது என்று கூறி, "சைவம்" என்ற சிவநெறியில் நின்றவர். கீரிமலையில் சிவநெறிக் கழகத்தை ஆரம்பித்து, சித்தாந்த, இலக்கண, இலக்கிய வகுப்புகளை எ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கு செய்து, சமயம் சார்ந்த பல போட்டிகளை மாணவர்களுக்கு நடத்தி, பரிசளித்து, சிவநெறியை குடாநாடு முழுவதும் பரப்பியவர் என்னருமை ஆசான்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகசபை உறுப்பினராக இருந்து, ஆலயத்திற்கு தொண்டுகள் பல ஆற்றியவர். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் சைவ வளர்ச்சிக் கழக பொறுப்பாளராக நீண்ட காலம் சேவையாற்றியவர். அவருடைய தன்னலம் கருதாத சேவைக்காக "இறைபணிச் செம்மல்", சிவத்தமிழ் செல்வர்", "ஆசிரிய மணி" என்ற பல பட்டங்கள் பெற்று கௌரவிக்கப் பட்டவர்.

ஆசிரியர் விளையாட்டுத் துறையிலும் நுண்மான் நுழைபுலம் மிக்கவர் என்பதை ஒரு சம்பவத்தின் மூலம் அறிந்து கொண்டேன். பாடசாலை விளையாட்டுப் போட்டியில் ஓர் அங்கமாக 15 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கான தடைதாண்டி ஓட்டம் நிகழ்ந்தது. அவ்வேளையில் வரிசையில் ஒரு தடைதாண்டி நிலத்தில் வீழ்ந்திருந்ததை நடுவர்களுக்குச் சுட்டிக் காட்டியதும், அவர்கள் உடனடியாக நிகழ்வைத் திரும்ப நிகழ்த்தினர். நிகழ்வு உடனடியாக மீண்டும் நிகழ்த்தப் பட்டதால், சில மாணவிகள் களைத்து போய் தங்கள் திறமையை வெளிக்காட்ட முடியவில்லை என நடுவர்களிடம் முறையீடு செய்த போது, தங்களை யாரும் பிழை சொல்ல முடியாது என கூறினர். இவற்றையெல்லாம் ஆசிரியர்கள் ஓய்வு எடுக்கும் அறையின் சாளரத்தின் ஊடாகப் பார்த்துக் கொண்டிருந்த ஆசிரியர் என்னைக் கூப்பிட்டு, நடந்ததை விசாரித்து, AAA என்ற விதியின் படி, ஒரு நிகழ்ச்சி முடிந்து 15 நிமிடத்திற்குள், மீண்டும் அந்த நிகழ்ச்சி திருப்பி நடத்த முடியாது எனக் கூறினார். அப்போது தான் நான் ஆசிரியரின் உதவும் பண்பு, ஆளுமை, ஆற்றல், நுண்மாண் நுழைபுலம், பரந்து விரிந்த அறிவு, எதையும் நுணுகி ஆராயும் தன்மை, எல்லாவற்றையும் அவதானிக்கும் திறன், நீதியை நிலை நாட்டுவதில் உள்ள அக்கறை என்பவற்றைப் பற்றி உணர்ந்து கொண்டேன்.

ஆசிரியர் தன்னுடைய பணிகள் எல்லாவற்றையும் பனி,குளிர், மலை,வெயில், காற்று, பகல், இரவு என்று எதனையும் பொருட்படுத்தாமல் துவிச்சக்கர வண்டியில் ஓடித் தெரிந்தே மேற்கொண்டார். சமூகத்தின் தூற்றுதல் , போற்றுதல் என்பவை பற்றி கவலைப் படாமல் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற திருநாவுக்கரசரின் வாக்கிற்கமைய வாழ்ந்த உத்தமர்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்ப படும்."

என்ற வள்ளுவர் வாக்கின்படி, உலகெங்கும் வாழுகின்ற அவரது மாணவர்கள், அன்னார் காட்டிய நெறியில் வாழ்ந்து கொண்டிருப்பது வெள்ளிடை மலை. ஔவையாரின் பாடலாகிய " நேசனை காணாவிடத்து நெஞ்சாரவே துதித்தல், ஆசானை எவ்விடத்தும் அப்படியே " என நினைந்து, ஆசியரின் ஆன்மா எல்லாம் வல்ல சிவகாம சுந்தரி சமேத ஆனந்த நடராசப் பெருமானின் திருவடியில் என்றும் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

**திருமதி. கேசினி கோணேஸ்வரன்**
( அவுஸ்திரேலியா )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி



கீரிமலை சிவநெறிக் கழகத்தின் ஸ்தாபகரும்,

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான

நிர்வாக சபையின் சிரேஷ்ட உறுப்பினரும்,

இளைப்பாறிய முதன்மை ஆசிரியரும்,

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான

## திரு. ச. விநாயகரத்தினம் அவர்கள்

இறையடியில் அமைதி பெற்றுவிட்டார்.

தன் வாழ்நாள் முழுவதும் சமயத்துக்காகவும்,
கல்வி வளர்ச்சிக்காகவும் அயராது உழைத்த உத்தமரை
நினைந்து பிரார்த்திப்போம்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வளர்ச்சியில்
அல்லும் பகலும் அயராது பணி செய்த திருத்தொண்டரின்
பிரிவால் மிகுந்த கவலை அடைகிறோம். அன்னாரின் ஆத்மா
சாந்திபெற துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன் அவர்கள்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு இந்த உலகைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளிச் செய்கின்ற ஐந்தொழில்களையும் புரிகின்றார். அவரது ஆளுமைக்குட்பட்ட புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த நாம் ஒவ்வொருவரும் பாக்கியசாலிகளே!

மனிதன் உலக வாழ்க்கைக்காகப் பல்வேறு தொழில்களையும் பல்வேறு செயற்பாடுகளையும் முன்னெடுக்கக் கல்விச் செல்வத்தைப் பயன்படுத்தினான். இந்தக் கல்விச்செல்வம் ஒன்றுதான் காலத்தால் அழியாத அருஞ்செல்வம். இக்கல்விதான் நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வைப்பதோடு கௌரவமாகவும் தன்மானத்துடனும் பேரோடும் புகழோடும் நாம் வாழ வழிசமைக்கின்றது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்கு. இவ்வுலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் படித்திருந்தால் மட்டும் போதாது படித்தபடி ஒழுகவேண்டும். பொய் சொல்லக்கூடாது என்று படித்துவிட்டு சதா சர்வகாலமும் பொய் சொல்லியே வாழ்தல் கூடாது. நல்லதையெ எண்ணி, நல்லதையே செய்து, நல்லபடி நடந்து உலகில் நாம் நல்லவர்களாக வாழவேண்டும்.

வாழ்க்கை வாழ்வதற்கேயன்றி அழிப்பதற்கல்ல. இந்த உடலில் உயிர் இருக்கின்றபோதே நல்லனவற்றையெல்லாம் செய்து விடவேண்டும். உடம்பிலிருந்து உயிரானது பிரிந்துவிட்டால் அதன்பிறகு மதிப்பே இருக்காது. மறுகணமே பிணத்தை எடுத்துப்போய் சுடலையில் வைத்துக் கொளுத்திவிடுவார்கள்.

இந்த மாயா உலகில் எது இல்லாமலும் வாழ்ந்து விடலாம். ஆனால் கல்வியறிவு இல்லாமல் வாழவே முடியாது. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த எல்லாம்வல்ல பரம்பொருளாக பல்கோடி சூரியப் பிரகாசத்துடன் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்ஜோதியாக ஒளிரும் சிவபெருமானின் திவ்ய பேரருளால் எமக்கு இந்த மானிடப்பிறவி கிடைத்திருக்கின்றது. "அரிது அரிது மானிடராய்ப பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். ஆதலால் புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கின்ற நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தவேண்டும். "அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்பதற்கிணங்க இறைவனின் பேரருட் கருணைத் திறத்தினால் நாம் இத்தொல்லுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலும் கூன், குருடு, செவிடு இல்லாமல் நல்ல ஆஜானுபாகுவான தோற்றத்துடன் ஊனமின்றி உத்தமராக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இந்த அரிய வாழ்க்கை யார் தந்தது? எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளான சிவபெருமான் தந்தது. அந்த வகையில் நாங்கள் புண்ணியஞ் செய்தவர்களே!

பூர்வஜென்ம புண்ணியப் பேற்றினாலேயே நாம் இந்த உலகில் மானிடராய்ப் பிறந்து மகோன்னதமாகவும் மங்களகரமாகவும் மகிழ்ச்சியாகவும் மனோரம்பியமாகவும் இன்பமே துய்த்து எந்நாளும் துன்பமே இல்லாமல் செவ்வனே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கு அடிப்படை அத்திவாரம் இட்டது கல்விச் செல்வம்தான்.

ஓர் அரசனுக்கு அவனுடைய நாட்டில் சகல மரியாதைகளும் மதிப்பும் தாராளமாகக் கிடைக்கும். கல்வியிற் சிறந்து நல்லல அறிஞர்களாக இருக்கின்ற அறிவாளிகளுக்கு சென்ற இடமெல்லாம் நல்ல சிறப்புக் கிடைக்கும். நாம் நன்கு கற்று நல்ல அறிவுள்ளவாள்களாக ஆத்மஞானம் உள்ளவர்களாகத் திகழ்வதற்கு வழிவகுத்துக் கொடுத்தது கல்விச் செல்வம் மட்டுந்தான்.

இந்தக் கல்வியை எமக்குக் கற்றுத்தந்த நல்லாசானை அதாவது குருவை நாம் மறக்கவே கூடாது. என்றும் எப்போதும் எந்நேரமும் மனதில்வைத்து வணங்கவேண்டும். அவர்களில்லையேல் நாம் இப்பூவுலகில் மதிப்புடனும் மரியாதையுடனும் நல்ல கௌரவத்துடனும் மிகுந்த பேரோடும் புகழோடும் வாழமுடியாது. அவர்கள் நல்ல முறையில் கல்விச் செல்வத்தை எமக்குக் கொடுத்தபடியால்தான் நாங்கள் சிறப்பான வாழ்க்கை வாழ்கின்றோம் என்று கூறின் மிகையாகாது. ஒரு மனிதனில் எவராவது மதிப்பும் மரியாதையும் வைக்கவேண்டியும் அவரோடு இணங்கி இருக்கவேண்டியும் ஒட்டி உறவாடவேண்டியும் வழிவகுத்துக் கொடுத்தது இந்தக் கல்விச் செல்வந்தான் எனில் அது சாலப் பொருந்தும்.

கல்விச் செல்வம் இல்லாதவர்கள் சபையிலே கௌரவம் பெறமாட்டார்கள். கல்வியறிவு அற்றவர்கள் மரத்துக்குச் சமானம் என்கிறார் ஔவையார்.

"கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் – சபை நடுவே
நீட்டோலை வாசியாது நின்றான் குறிப்பறிய
மாட்டாதவன் நன்மரம்" என்பது மூதுரை.

எனவே படிப்பறிவில்லாதவர்களால் பயனேதுமில்லை ன்பதே கருத்து.

அத்துடன் "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்றபடி படித்தவர்களை படித்தவர்களே நாடி விரும்பித் தாமாகவே சென்று உரையாடி மிகவும் அன்போடு பழகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வார்கள். மேலும் படித்தவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். அடக்க ஒடுக்கமாக அமைதியாகவே காணப்படுவர். ஆமையைப் பாருங்கள்; அளவுக்கு அதிகமாக முட்டையைப் போட்டுவிட்டு மிகவும் அடக்கமாக அமைதியாகப் போய்விடும். ஆனால் கோழியொ ஒரு முட்டையைப் போட்டுவிட்டு சத்தம் போட்டுக் கொக்கரித்து ஊரைக் கூட்டிவிடும்.

"கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர் தாம் என்றும் மதியாரே! – வெற்றிநெடும்
வேல் வேண்டும் வாள் விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப்பழம்"

என்பது நன்னெறி. அதாவது வாழைப்பழத்தைப் பால்விரும்பும்; புளிப்பான காடியை விரும்புமோ விரும்பமாட்டாது. அதேபோல அறிவாற் சிறந்த கற்றறிந்த அறிஞர்களை மேன்மக்கள் நன்கு விரும்புவார்கள். ஆனால் அற்பர்கள் மதிக்கவே மாட்டார்கள். எனவே படிப்பிற் சிறந்த பண்புள்ளோர்க்கு என்றும் எங்கும் மதிப்புத்தான். அவர்களுக்கு ஈடு இணை கிடையாது.

கற்றறிந்தவர்கள் தாம் என்னவென்று படித்தார்களோ அதனையே தம்முடைய வாழ்க்கையிலும் கடைப்பிடிப்பர். கற்ற விடயங்களை நன்கு ஆராய்ந்து செயற்படுவர். ஆகவே கல்விச் செல்வத்தைப்போல ஒரு சிறந்த மேலான செல்வம் எதுவுமே இல்லை. மானிடராய்ப் பிறந்த மகிமை பெற்ற ஒவ்வொருவரும் கல்வி கற்றிருக்க வேண்டும். படித்தால் மட்டும் போதாது; படித்தபடி நடக்கவும் வேண்டும்.

சிறந்த பண்புமிக்க நல்லறிஞர்கள் ஒரு நாட்டின் பொக்கிஷமாகும். கல்வியின் மேன்மையை உணர்ந்துதான் நமது முன்னோர்கள் "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்று கூறிச் சென்றிருக்கின்றார்கள். பிச்சை எடுக்க நேரிடினும் படிப்பை விடக்கூடாது. படிப்புத்தான் நல்வாழ்வுக்கு அடி அத்திபாரம். கல்வி இல்லையேல் யாரும் மதிக்கமாட்டார்கள்.

எனவே,

கல்விச்செல்வம் மிக மேலான உயர்ந்த செல்வம். அந்தக் கல்விச் செல்வத்தை நாம் நல்லபடி பெறவேண்டுமாயின் கலைமகளாம் நாமகள் சரஸ்வதியைப் போற்றித் துதிக்கவேண்டும். நவராத்திரி நாளில் விரதமிருந்து வணங்கவேண்டும்.

எமது வாழ்நாள் கொஞ்சமே. ஆதலால் புனிதப் பிறவியாகிய மனிதப்பிறவி முடியுமுன்னே கல்விச் செல்வத்தை வேண்டியவு கற்றுக்கொள்ள வேண்டும். அத்துடன் இந்த அருமையான கல்விச் செல்வத்தை எமக்கு ஆவலுடன் அள்ளிக் கொடுத்த ஆசானையும் மறக்கக்கூடாது. அவருக்கு எம்மாலானமட்டும் உதவிகள் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரை வணங்கி அவருடைய தேவைகளை முடிந்தளவு பூர்த்தி பண்ணுதல் வேண்டும். இஃது எமது தலையாய கடமையாகும்.

மேலும் –

“நற்றாமரைக் கலத்தில் நல்லன்னம் சேர்ந்தாப்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் – கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்”

என்பது ஔவையார் கூற்று. இதில் அவர் என்ன கூறுகின்றார் என்றால் தாமரைக் குளத்திலே நல்ல அன்னம் சேர்ந்திருப்பது போல படித்த பேரறிஞர்களைப் படித்தவர்களே விரும்பித் தாமாகவே சென்று உரையாடி மகிழ்வர். மூர்க்க குணம் படைத்த படிக்காத முட்டாள்களை படிப்பறிவில்லாத பாவிகளே சேர்ந்திருப்பர். காட்டிலே இறந்துபோன உடலைக் காகம்தான் சென்று விரும்பி உண்ணும்.

இவ்வளவு எளிமையான விளக்கத்துடன் ஔவையார் கூறியிருக்கும் ஆழ்ந்த கருத்து மேலும் மேலும் சிந்திக்கச் சிந்திக்க தேன் போன்று உள்ளிருந்து இனிக்கும். இதுவும் படித்தவர்களுக்கு மட்டுமே புரியும். மற்றவர்களுக்கு எள்ளளவும் புரியாது.

இப்பரந்த நிலவுலகத்தின் கண்ணே வாழ்கின்ற பல்கோடி ஜீவராசிகளில் இந்த மனிதன் ஒருவனாலேயே கல்விச் செல்வத்தை பெறமுடியும். வேறு ஒருவராலும் முடியவே முடியாது.

படிப்பறிவுள்ள பாமர மக்களும் கல்விச் செல்வத்தைப் பெற்று வாழ்வில் நல்ல உயர்ந்த பெரிய ஸ்தானத்தைப் பெறமுடியும். எவ்வளவு தூரம் கற்றறிந்து அறிவிற் சிறந்தவர்களாக வருகின்றார்களோ அவ்வளவு தூரம் அவருடைய நுண்ணறிவு பலத்த அத்திவாரத்தைக் கொடுக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. மேலும், கல்விக்கு அழகு கசடற மொழிதல்’ என்பதாகும். அத்துடன் “ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்” என்கிறது உலகநீதி. அந்த வகையில் கல்விக்கு உயர்வானது வேறு எதுவுமேயில்லை என்பதை மாணவ சமுதாயம் உணர்ந்து நடக்கவேண்டும்.

இக்கால மனித வாழ்வில் உடம்பும் உயிரும் ஒன்றாக இருக்கும்போதே கற்கவேண்டியதைக் கற்றுக்கொள்ளவேண்டும். நல்லறிவும் நற்பண்பும் நல்லொழுக்கமும் எமது வாழ்க்கை என்ற வண்டியின் சக்கரங்களாகி நீதி நெறியிலே நம்மை இட்டுச்செல்கின்றன. மனிதருக்கு முன்னேற்றப்பாதையைக் காட்டி அந்த நல்ல சீரான பாதையிலே செல்ல வழிவகுப்பது கல்விதான்.

“என்னிடம் காணப்படுகின்ற அறிவுக்கும் ஆற்றலுக்கும் நான் புத்தகங்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நன்றி சொல்ல வேண்டும். நல்ல நெறிகள் இவைதான் என்று அறியச்செய்து ஆக்கமும் ஊக்கமும் அளித்து என்னை நேர்வழியில் இட்டுச் சென்றவை நான் படித்த நூல்களே" என்று அழகாகச் சொல்லியிருக்கின்றார் "மார்சிம் கோர்க்கி" எனும் நல்லறிஞர். புத்தகங்களைப் படிக்கப் படிக்க ஆழ்ந்து ஆராய்ந்து வாசிக்க வாசிக்க அவை என்னை உலகத்துடனே மேலும் நன்றாக இறுகப்பிணைத்து வந்ததோடு மென்மேலும் வாழ்க்கை என்ற ஒளி பலிப் பிரகாசித்து நல்லறிவுப் பெட்டகமாக என்னை உருவாக்கிவிட்டன என்று மிக உருக்கமாகக் கூறியிருப்பது இவண் நோக்கத்தக்கது.

"மெய்ப்பொருள் இதுதான்" என்று நம்மவர்க்கு உணர்த்தி நிற்பதோடு, நல்ல அரணாக மாறி வாழ்க்கை வண்டியை நேரான, சீரான பாதையிலே இட்டுச்செல்ல உதவுவன நூல்களேயாகும். அதுவும் நாம் கற்றுக்கொண்ட அளவிலேயே நிகழும்.

"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு – மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்"

என்கிறது மூதுரை.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்னவெனில், தண்ணீரின் அளவுக்குத் தக்கபடியே அல்லிச்செடி உயர்ந்து நிற்கும். அதுபோலவே படித்திருக்கும் நூல்களின் தரத்தைப் பொறுத்தே கல்வியறிவும் இருக்கும் என்பதேயாகும்.

ஆகவே,

கல்விப்பெருஞ் செல்வத்தைப் முறையாகப் பெற்றுக்கொள்வதற்கு நாம் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்றுக்கொள்ளவேண்டும். கூடாத பழக்கங்களைக் கற்றுத்தரும் புத்தகங்களை வாசிக்கவே கூடாது. "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது முதுமொழி. அந்த வகையில் நல்ல முறையில் நேர் வழியில் கல்விதனைக் கற்று இவ்வுலகில் நாலு பேர் மதிக்கின்ற நற்பிரஜைகளாக உலாவந்து, நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்பி, நல்வாழ்வில் திளைக்க எங்களை நாங்களே அதாவது நம்மை நாமே தயார்படுத்தி நல்ல நெறியில் வாழ்ந்து மகிழ்ந்திருப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய அறநெறிக்கல்வி மாநாடு - 2017

## ( இந்து கலாசாரத் திணைக்களம் நடாத்தியது - கொழும்பு )





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதகல் சம்பில்துறை சம்புநாத ஈஸ்வரம்

## சித்தர் நரசிங்க சுவாமிகள் சமாதியடைந்தார்



## சுன்னாகம் பழனி சுவாமிகள் சமாதியடைந்தார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை பஞ்சரத பவனி

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றின் விசேடங்களைத் தன்னகத்தே கொண்டு மாவிட்டபுரம் என்னும் காரணப்பெயர் மூலம் போற்றப்படும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் தொன்மை, ஆழ வேரூன்றி அகலக்கிளை பரப்பி வானுயர்ந்தோங்கி நிற்கும் கீர்த்தி வாய்ந்த வியாபகம் கொண்டு விளங்கும் அற்புத வரலாறாகும்.

தில்லை மூவாயிரவர் வழிப்படுத்தலின் படி சிதம்பரத் திருத்தலம் வாழ் தீட்சிதர் வம்சாவழி வந்தோரே ஆரம்பத்திலிருந்தே இத்திருத்தலத்தின் பூஜா கைங்கரியங்களைப் பொறுப்பேற்று ஆற்றி வந்துள்ளமையானது வரலாற்றுப் புகழ் வாய்ந்த பதிவாகக் குறிப்பிடப்படுகிறது.

தீட்சிதர் பெரியமனத்துள்ளார் அவர்களே, முதலாவது ஆதீன வம்சாவழி தோற்றுவாயாக நாற்பது வருடங்கள் கிரியா அனுஷ்டான ஆலய பரிபாலன அந்தணப் பெருந்தகையாக பதிவு செய்யப்பட்டுள்ளார். இவரைத் தொடர்ந்து தீட்சிதர் சிதம்பரம் அவர்கள் நாற்பத்தியொரு வருடங்களும், தீட்சிதர் சின்னமனத்துள்ளார் அவர்கள் நாற்பத்தைந்து வருடங்களும் சமயானுஷ்டான பரிபாலன நிர்வாக பொறுப்பே வகித்து வந்துள்ளார். கி.பி. 789 தொடக்கம் கி.பி. 2011 வரையான மாவை ஆதீன வம்சாவழியினர் பற்றிய பதிவு மாவைக்கந்தன் திருத்தல வரலாறு பக்கம் 74, 75இல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பறங்கியர் ஆட்சியில் கோயில் தரைமட்டமாகி ஆங்கிலேயர் ஆட்சியில் புத்தெழில் பெற்று மீண்டும் தொண்ணூறுகளில் இடம்பெற்ற உள்நாட்டுப்போர், இடப்பெயர்வு என்பவற்றினால் சிதிலமடைந்து தற்போது மீண்டும் புத்தொழில் பெற்றுத் திகழ்கிறது.

கோயிற்கடவை எனும் பெருமைக்குரிய மூன்று கிராமங்களாகிய கீரிமலை, காங்கேசன்துறை, இன்றைய மாவிட்டபுரம் என்கின்ற கதிரையாண்டவர் கோயில் அமைந்த இடம் ஆகிய மூன்றும் ஒன்றில் ஒன்று தொடர்புபட்ட சம்பவங்கள் சேர்ந்து இணைந்து காணப்படுகிறது.

சோழ இளவரசியின் பிணிநீக்கும் இலக்குடன் அமைந்த ஈழப்பயணமானது நகுலாசல தீர்த்த யாத்திரையாக அமைந்து கதிரையாண்டவர் சந்நிதியில் குதிரை முகம் மாறி அழகு முகம் தோன்றியமை அற்புத நிகழ்வாகும். இளவரசியின் எழில்முகம் மலர்ந்த திருத்தலமாக மாவிட்டபுரம் (குதிரை முகம் மாறிய தலம் எனப் பொருள்) அமைந்தமைக்கான நன்றியும் தெய்வீக உந்துதலும் இணைசேர்ந்து கந்தனுக்கு ஆலயம் அமைக்கும் தெய்வ சங்கற்பத்திற்கமைய மதுரை மன்னன் திசையுக்கிரமபெருவழுதி தன் தெய்வத் திருமகளின் சேவைக்கு வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரவியங்களையும் கோவில் கட்டுமானப் பணிகளுக்கான வல்லுனர்களையும் சோழமண்டலத்திலிருந்து ஈழமண்டல வடபுல கடல்மார்க்கமாக அனுப்பிவைத்தமை குறிப்பிடத்தக்கது. இளவரசியின் ஆவலை நிறைவேற்றி வைக்க ஆலயம் எழுந்தது. மூல விக்கிரகங்களான கந்தசுவாமி, தெய்வயானை, வள்ளியம்மை விக்கிரகங்களை மன்னனே முன்னனின்று சோழ மண்டல சிற்ப வல்லுநர்கள் மூலம் உருவாக்கி தீட்சிதர் பெரியமனத்துள்ளார் கையில் ஒப்புவித்து ஒரு அற்புத சுபமுகூர்த்தத்தில் மரக்கலத்தில் அனுப்பிவைக்க 'காயாத்துறை' எனும் வடபுல கடலோர இறங்குதுறைக்கு கந்தன் திருவுருவம் வந்திறங்கியது. இப்பெருமையால் இவ் இறங்குதுறை 'காங்கேயன்துறை' என பெயர் பெற்று வரலாற்றுப் புகழ் பெற்றது.

சோழ மண்டலத்திலிருந்து ஈழமண்டலம் வந்த இளவரசி மாருதப்புரவீக வல்லியின் திவ்ய சௌந்தர்ய தெய்வ கைங்கரியத்தால் மாவை ஆதீனப் பேரரசு தோற்றம் பெற்றது. தொடர் வரலாற்றுப் படையெடுப்புகள் காரணமாக பாரிய அழிவுகளைச் சந்தித்த போதும் வந்தாரை வாழ வைத்து நொந்தாரின் பிணியகற்றும் கந்தன் திருத்தல வளாகமும் சுற்று வட்டார பகுதிகளும், ஒரு ஆலயமானது ஒரு சமய அறநெறி நிறுவனம் எவ்வாறிருக்க வேண்டும் என்பதற்கிணங்க மடாலயங்கள், கலாமன்றம், அறிவாராய்ச்சி மையம், நந்தவனம், அற்புத விருட்சங்கள் மூலிகைகள், இராஜகோபுரம், கோபுரம் நிகர் சப்பறம், பஞ்சரதங்கள், பூந்தண்டிகைகள், வாகனங்கள் என இன்னோரன்ன அனைத்தும் பூரணமாக கொண்டமைந்து மயன் சமைத்த இந்திரபுரியாகக் காட்சியளித்தமை வரலாற்று புகழ் நிறைந்த அதிசயமாகும்.

அந்தண சீலர்களின் அக்ரகாரம், இசை வேளாளர் மடாலயம், கலை வளர்ச்சிக்கான முத்தமிழ் கலாமன்றம், தென்இந்திய இசைக் கலைஞர்களின் கீழைக்கோபுர வாசல் இசை நிகழ்வுகள், அசையும் கோபுரமாய் உயர்ந்த சப்பறம், மேலைக் கோபுரவாசல் மாம்பழத் திருவிழாவில் பழனியின் அருளாட்சி, ஒன்றன்பின் ஒன்றாக வலம்வரும் பஞ்சரத பவனி, நகுலமலைச்சாரல் கண்டகி தீர்த்தத்தில் அன்னை தந்தை சமேத முருகப் பெருமானின் நீராட்டம், பிதிர்க்கடன் தீர்க்கும் அற்புத ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவம், காயாத்துறையில் தீபாலங்கார அழகொளிரும் மாவைக்கந்தனின் தெப்போற்சவம், பூங்காவனம் அத்தனையும் அற்புதமாய் நடந்தேறிய நிஜத்தை நம் நெஞ்சம் இன்னும் மறக்கவில்லை.

தென்னிலங்கை, மேற்கு மத்திய பாகங்களில் இருந்து யாழ் தேவி புகைவண்டியில் மகோற்சவம் காண திரண்டுவரும் பக்தகோடிகள் வடக்கு வீதியில் நிகழும் நாதஸ்வர தவில் கோஷ்டிகளின் இசைமழையில் நின்று நனையும் காட்சி அற்புதம். வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் இருந்தெல்லாம் இரண்டு அழகிய காளைகள் பூட்டிய மூடுவண்டிகளில் குடும்பம் சுற்றம்சூழ பாத்திர பண்டங்கள் தானியங்கள் மரக்கறிகளோடு கோயிலைச்சூழவும், கீரிமலை வீதி வழியுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளிலும் வந்து தங்கி உணவு சமைத்து உண்டு பசியாறி, வழி தெருவில் வந்து பெருகும் அடியவர்களுக்கும் பசியாற்றி மகிழும் காட்சிக்கு நிகரேது. வடம்பிடித்து வாழ்நாளை வளர்த்தெடுக்க நிறையும் சனத்திரளும், தேரிலிருந்து இறங்கி சண்முகனார் பச்சை சாத்தி இசை முழக்கத்திற்கு ஏற்ப நடனமிட்டு வானவர் பூமாரி பொழிய ஆலயத்திற்குள் நுழையும்வரை தேர் முட்டியில் கலாமன்ற இசைக்கலைஞர்கள் திருப்புகழ் இசை மழை பொழிந்து மகிழ்வர்.

கீரிமலையிலிருந்து அலங்கரிக்கப்பட்ட காளைகள் பூட்டிய பூந்தண்டிகையில் வள்ளி தெய்வயானை சமேதராக முருகப்பெருமான் பவனிவரப் பாதையின் இருமருங்கிலும் மடை பரவி ஆராதிக்கும் பூரண கும்பங்கள். எழுதி விளக்க வார்த்தையற்ற உன்னத அழகோவியங்கள். கூடவே வாழ்ந்து பாடிப் பரவி மலர் கொய்து மாவைக்கந்தனை மனங்கொண்ட உவகையுடன் ஏத்தித் திளைத்த பொற்காலம் மீண்டும் வந்து எம் கண் முன்னே இது கனவல்ல, நிஜம் என்று காட்டுகின்ற காலம் மீண்டும் மலரவேண்டும். எத்தனை பிறப்பெடுப்பினும் மீண்டும் மாவையிலேயே பிறப்பெடுக்கவேண்டும் என்னும் பேரவா தோன்றிச் சிலிர்க்க வைக்கும் பரவசமே அலாதிதான். உயிர் கொண்டுலாவும் காட்சிகளாக எங்கள் நெஞ்சத் தடத்தில் எழுகின்ற நினைவலைகளே எம்மை வளர்த்தெடுக்கும் அமுதாகிப் பொங்கிவழியும் உணர்வே இனிய அனுபவம் தான். அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அறுபதுகளின் பின் கண்ட காட்சிகள் தந்த அனுபவப் பொக்கிஷத்தில் ஒரு துளி மட்டுமே இங்கு பரிமாறப்பட்டுள்ளது. மீதிப் பெருங்கடலை எப்போது எப்பிறப்பில் எவ்வாறு எடுத்துரைப்பதோ யாம் அறியோம்.

வரலாறு சிதைக்கப்படலாம். வாழ்விடங்கள் அழிக்கப்படலாம். வாழ்நாளே தொலைந்து போகலாம். இடையூறு எத்தனை எத்தனை ஏற்படினும் மீண்டும் மீண்டும் பொலிவுடன் எழுகின்ற அற்புதம் தமிழுக்கும் உண்டு. தங்கத்தமிழ்க் கடவுள் முருகன் வாழ்ந்த திருத்தலத்திற்கும் உண்டு. ஆம் பஞ்சரதம் மீண்டும் வரும். நாற்பத்தைந்து அடி உயரம் கொண்ட உத்தம மகோத்தர திருத்தேர் வெள்ளோட்டப் பெருவிழாவானது 21.07.2017 வெள்ளிக்கிழமை நண்பகல் 1.30 மணிக்கு பிரபஞ்ச பரிபாலன கைங்கரியத்திற்காக மாவை நகர் தேரோடும் வீதியில் பவனி வருவதற்கு தயாராக இருக்கும் அதிசயமே இதற்கொரு எடுத்துக்காட்டு அல்லவா? மாவைக்கந்தன் மலர்ப்பாதம் சரண் புகுந்தால் மாய இருள் அகலும். மாண்பு மிகு வாழ்வு வரும்.

"ஆறிரு தடந்தோள் வாழ்க".

– மாவை பாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் வளர்ப்போம்

திருமதி பகீரதி கணேசதுரை அவர்கள்

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

கற்கவேண்டியவற்றைக் குற்றம் குறை களைந்து தெளிவாகக் கற்றபின், அதற்குத் தக்கபடி ஒழுகவேண்டும் என்பதும் வள்ளுவர் வாய்மொழியாகும். முன்பெல்லாம் "கற்றிலனாயினும் கேட்க" என்பதற்கிணங்க புராணம், இதிகாச, இலக்கியங்கள் யாவும் செவி வழியாகப் பேணிப்பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. படிப்பறிவற்ற பாமரர் கூட அறநூல்கள் கூறும் அற்புதக் கருத்துக்களை அறிந்து அதன்படி ஒழுகும் வகையில் புராண, இதிகாச சமய இலக்கிய நாடகங்கள் பட்டிதொட்டியெங்கும் திறந்தவெளி மைதானத்தில் இரவிரவாக விடிவெள்ளி காலிக்கும் வரை ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். கிராமங்கள் தோறும் மன்றங்கள், சன சமூக நிலையங்கள் அமைக்கப்பட்டு ஆண்டு தோறும் புதிய புதிய கலைப்படைப்புக்கள் அரங்கேறிக்கொண்டே இருந்து வந்துள்ளமை நாமறிந்த விடயமே. தவத்திரு சங்கர்தாஸ் சுவாமிகள் படைத்தளித்த இசை நாடகங்கள் ஈழத்து இசை நாடகப் பாரம்பரியத்து வித்திட்டமை யாம் பெற்ற தவப்பயனே அன்றி வேறில்லையெனலாம்.

ஆனால் இன்றைய காலகட்டங்களில் சமய அறக்கருத்துக்களைத் தம்மகத்தே பொதிந்து பிரகாசிக்கும் புராண இதிகாச இலக்கிய அறிவு மாணவர் மத்தியில் அருகியே காணப்படுகின்றது. ஒரு விடயத்தை வாசிப்பதற்கும் கேட்பதற்கும் நடித்துக் காட்சிப்படுத்துவதைப் பார்ப்பதற்கும் பல்வேறு வகையான உள்வாங்கல் தன்மைகளில் ஆற்றுகை வெளிகளை மையப்படுத்தி உயிர்வாழும் நாடகப் படைப்பே முன்னுரிமை பெறுகின்றது. மகாத்மா காந்தியை சத்தியம் காக்கும் ஒருவராக மாற்றியமைத்த படைப்பாக அரிச்சந்திர மயான காண்டம் குறிப்பிடப்படுகின்றது.

இளம் சிறார்களின் உள்ளங்களில் விழுமியங்களைப் பசுமரத்தாணிபோல ஆழப்பதிய வைப்பதற்கு மிகப்பொருத்தமான ஊடகமென்றால் அது நாடகமேதான். கர்நாடக இசையும், மனோரதிய நடிப்பும், அற்புத முகபாவமும், பகட்டான ஆடை அணிமணிகளும், மாளிகை, நந்தவனம் இராஜவீதி போன்ற காட்சித் திரைகளும் இலக்கியச் சுவை பொங்கும் மொழியழகும் மனித மனங்களை ஆலயமாக்கி காம குரொத விகாரங்களை அறவே துடைத்தெறிந்து ஆன்மீக ஒளிபரப்பவல்லன. இத்தகைய இலக்கிய நாடகங்களைத் தயாரிப்பதற்கு ஒப்பனை வேட உடை மேடைக் காட்சியமைப்பு, பின்னணி இசைக்கலைஞர்கள், மொழிச்செழுமை கொண்ட எழுத்துருக்கள், பாடிக்கொண்டே நடிக்கவல்ல தோற்றப்பொலிவு கொண்ட நடிகர்கள் போன்ற காத்திரமான விடயங்கள் அத்தியாவசியமாக இருக்கின்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தினாலேயே இத்தகைய நாடகத் தயாரிப்பு நேர ஒதுக்கீடும் நிதி ஒதுக்கீடும் போதாமையைக் காரணம் காட்டி தட்டிக்கழிக்கப்படும் நிலை ஒரு துர்ப்பாக்கிய நிலை என்பதை மனதில் கொள்வது அவசியம்.

இருப்பினும் எது எவ்வாறாயினும் பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் வெறும் போட்டிகளுக்கும், விழாக்களுக்கும் மட்டுமே நாடகம் தயாரிக்கும் நிலையை மாற்றி மனித வாழ்வியல் நிறைவிற்கும் ஆன்மீக அறநெறி விழுமியப் பேணலுக்கும் வழிசமைத்து கல்வி இணைப்பாடவிதான நிதி ஒதுக்கீட்டினை இத்தகைய முயற்சிகளுக்கும் பகிர்ந்தளித்தால் இன்றைய இளையோரின் மனங்கள் ஆற்றுப்படுத்தப்படும் வாய்ப்பை அடைவது திண்ணம். தொலைத்தொடர்பு சாதனங்கள், இணையத் தளங்கள் என்னும் நச்சுவட்டத்தில் தடுமாறும் இளையோரின் பெரும் பங்கு ஓய்வு நேரத்தைப் பயனுற மாற்றியமைத்து மண் பயனுற மானிடம் காக்கும் அற்புத மனிதம் படைக்கும் இறை கைங்கரியத்தை மிக வேகமாக முன்னெடுக்கவேண்டிய கடப்பாட்டை பெரியோர்கள் சிரமேற்கொண்டு சீர்செய்வதற்கு அருளொளியானது இருளகற்றி அறிவொளி பரப்பி எம் இளையோரைக் கரையேற்றவேண்டி முயற்சிப்போமாக.

அறநெறி தன்னைக் கற்கும் அன்புச் செல்வங்கள்
ஆன்மீக வாழ்வில் நின்று வாழ்ந்து காட்டுங்கள்
இறைபணி செய்து நீங்கள் இன்பம் கொள்ளுங்கள்
ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றி வையுங்கள்.

**தவத்திரு யோகசுவாமிகளின் உருவச்சிலை**
**நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில்**
**சமீபத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம் : உரையுடன்

திரு. வே. தனபாலசிங்கம் அவர்கள்

"சிவபுராணம்" என்பது சிவனது அநாதியான பழமைகூறும் பகுதி என்று பொருள் கொள்வர். புராணம் என்ற சொல் வடசொல்.

1. நமச்சிவாய நாதன்தாள் வாழ்க.
'நமசிவாய' என்ற சொல் ஐந்தெழுத்து மந்திரம். இங்கே மணிவாசகர் மந்திரத்தைக் குறிப்பிடவில்லை, இறைவனைக் குறிப்பிடுகின்றார். இறைவன் ஒளிவடிவானவன். நமசிவாய என்றால் – சிவாயநம என்றும் கொள்வர். சிவனுக்கு வணக்கம். ஆன்மாக்கள் இறைவனை வாழ்த்துவதால் இறைவனுக்கு விருப்போ வெறுப்போ இல்லை. உயிர்கள் தாம் வாழ்வதற்காகவே இறைவனை வாழ்த்துகின்றனர். நாதன் என்றால் தலைவன், கடவுள் என்று பொருள் கூறுவர். தாள் என்பது – பாதம் , கால், திருவடி என்று பொருள் கொள்வர். இறைவனது திருவடி வாழ்க என வாழ்த்துகிறோம். ஆன்மா இறுதியாகச் சேருமிடம் அவன் திருவடி நிழலே என்ற நம்பிக்கை சைவசமயத்தினருக்கு உண்டு.

2. இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்கா தான் வாழ்க.
ஒரு விநாடிகூட என் உள்ளத்தில் இருந்து நீங்காதவன் தாள் வாழ்க. இறைவன் உறைகின்ற இடம் நெஞ்சு. அது உயிருக்கு உயிராக உள்ள இடம். "தாள் வாழ்க என்ற இடம் சிந்திக்கவேண்டியது. அவன் நெஞ்சில் நிலைபெறுவதற்குக் காரணமாக இருப்பது திருவடி. எனவே அவன் தாளை வாழ்த்துகின்றார்.

3. கோகழியாண்ட குரு மணி தன் தன் வாழ்க.
கோகழியை ஆட்சி செய்த குருமணி ஆகிய இறைவன் திருவடி வாழ்க.

4. ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க.

5. ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க.
ஆகம வடிவாகி அணுகி அருள்புரியும் இறைவன் தாள் வாழ்க. ஏகனாகவும் அநேகனாகவும் (ஒன்றாகவும் பலவாகவும்) நிற்கும் இறைவனடி வாழ்க.
இறைவன் என்ற சொல்லின் பகுதி "இறை" என்பதாகும். இறை – சிறுத்தல் – தங்குதல் என்ற பொருள் படும்.

6. வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க.
மனவேகத்தை அடக்கி மன ஒருமைப்பாட்டை ஏற்படுத்திய வேந்தன் அடி வெற்றி பெறுக. இறைவனுக்கு மணிவாசகர் வேந்தன் என்ற இடம் கொடுக்கின்ற காரணம் உலக வாழ்வில் வேந்தன் ஆணைக்குக் கட்டுப்படுவதே இயல்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க.

பிஞ்ஞகன் – சிவன். பிறப்பை இல்லாமற் செய்கின்ற அருளைத் தருகின்ற பாதம் வெற்றி பெறுக.

8. புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க.

புறத்தார் என்பதன் பொருள் இறைவனை வணங்காமல் இருப்பவர்கள். சேயோன் என்பதன் பொருள் நீண்ட தூரத்தில் இருப்பவன். உள்ளே ஒரு பொருள் மறைந்திருக்கிறது – ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் உள்ள தூரத்தை மும்மலங்கள் அதிகப்படுத்துகின்றன. இறைவனது அழகான பாதம் வெற்றி பெறுக.

9. கரம் குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க.

கரம் – கை. கோன் – இறைவன். கைகள் தாமாகவே குவிதலால் அடியார்கள் ஆனந்தமாக வணங்குகின்ற இறைவனது பாதங்கள் வெற்றி பெறுக. கரம் வணங்குகின்ற போது மனம் மகிழ்கின்றது.

10. சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க.

சிரம் – தலை. சிரம் குவிவார் என்பது தலைக்கு மேலே கரம் குவிததைக் குறிக்கும். தலைக்கு மேலே கரம் குவிதலைக் குறிக்கும். தலைக்கு மேலே கைகளைக் குவித்து வணங்குதல் இறைவனைப் போற்றுவது மட்டும் உரியதாகும். பிறவிக்கடலிலிருந்து தன் திருவடிக்கு இறைவன் ஏற்றுவதை ஓங்குவிக்கும் என்ற சொல்லால் மணிவாசகர் குறிப்பிடுகிறார். பெருமையுடையவன் கழல் வெல்க.

11. ஈசனடி போற்றி எந்தையடி போற்றி

12. தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி

13. நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி

14. மாயப்பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி

15. சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

மேலே ஐந்து வரிகளில் ஏழு வடிவங்களில் இறைவன் வணங்கப்படுகின்றான்.

16. ஆராத இன்பம் ஆரளுமலை போற்றி

குறைவுபடாத, தெவிட்டாத இன்பத்தை அருளும் மலை என்று இறைவன் போற்றப்படுகின்றான்.

17. சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அவன் அருளாலே அவன் தாள் வணங்கி

19. சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை

20. முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்.

மேலேயுள்ள நான்கு வரிகளும் என்ன கூறுகின்றன. சிவன் மணிவாசகர் சிந்தையுள் நின்கின்றான். அதனால் அவனது அருளைப் பெற்றே அவன் தாள் வணங்கவேண்டும். இறைவனை வணங்குவதற்கு அவனருள் வேண்டும் – சிந்தையுள் நின்று – அடி மனத்தின் ஆழத்தில் இருப்பது சித்தம். மணிவாசகரின் சிந்தத்தில் சிவன் உள்ளான். மணிவாகரின் சிந்தத்தில் இறைவன் நின்றதனால் ஆனந்தம் ஏற்படுகிறது. திருப்பெருந்துறையில் மனித உருவில் சிவன் வந்தபோது முன்வினை ஓய்ந்தது. "உரைப்பன் யான்". இங்கே மணிவாசகர் இல்லை. சிவபுராணத்தை உரைப்பது சிவன். "யாண்" என்பது சிவன்.

21. கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி

22. எண்ணுதற் கெட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி

23. விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்

24. என்இறந்து எல்லை இல்லாதானே நின் பெருஞ்சீர்

25. பொல்லா வினையேன் புகழும் ஆறு ஒன்று அறியேன்.

கண்ணுதலானுடைய கருணை காரணமாக இங்கு வந்து எய்தி, எழிலார் கழலை என் கண்ணுக்குக் காட்டி, அத்திருவடிகளை இறைஞ்சுமாறு செய்தான். அவனது பெருமையையும் தமது சிறுமையையும் ஒப்புநோக்குகிறார். பெருமானின் சிறப்பு பெருமை எல்லையில்லாதது. அளக்கமுடியாதது. அவரைப் புகழும் அடி அறியேன் என்று மணிவாசகர் கூறுகின்றார்.

26–31 புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய்
வல்லரசுரராகி முனிவராய்த் தேவராய்த்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

பரிணாம வளர்ச்சி ஓசை நயத்தையொட்டிச் சில மாற்றம் வந்துள்ளது. மேலே காட்டிய 5 வரிகளையும் நுணுக்கமாகச் சிந்தித்தால் மாணிக்க வாசகர் சிறந்த விஞ்ஞானி என்பது தெரியவரும். 19ம் நூற்றாண்டிலேதான் டார்வின் ஆய்வு. எட்டாம் நூற்றாண்டில் அடிகள் ஆய்வு செய்துள்ளார். கல், புல், பூடு, மரம், புழு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு, பறவை, பல்வேறு மிருகம் மனிதன், பேய், கணம், அசுரர், முனிவர், தேவர், ஆகிய எல்லாப் பிறப்பும் பிறந்து இழைத்தேன் என்று கூறுகின்றார்.

32. மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்.

33. உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய் நின்ற

34. மெய்யா, விமலா, விடைப்பாகா வேதங்கள்

35. ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

திருப்பெருந்துறையில் சிவனை மனித உருவில் கண்ட காட்சி கூறுகிறார். இது கண்ணால் கண்ட காட்சி. ஓங்காரம் – ஓம் என்ற மந்திரம். ஓம்காரமாய் நின்றவன் சத்திய வடிவினன் – உண்மை வடிவினன். மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே என்ற அடிகளில் வரும் விடைப்பாகன் என்பது நாம ரூபம் கடந்த பரம்பொருளுக்கு சைவசமயத்தினர் கற்பித்துக்கொண்ட வடிவமாகும்.

புறக்கண்ணால் கண்ட காட்சி குருவின் மானிட வடிவம். சித்தத்தினுள் தங்கும் போது ஓங்கார வடிவம் என்கிறார். அடிகளாய் உய்வதற்காக கண்ட காட்சிகள்.

36. வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா

மணிவாசகர் இறைவனை வெய்யாய் – தணியாய் என்று சொல்கிறார். "இயமானன் என்பது அட்டமூர்த்தங்களில் எட்டாவதாகக் கொள்ளப்படும் இறைவனுக்குரிய பெயர். விமலன் என்பது சிவனைக் குறிக்கும் பெயர்.

37. பொய்யாய் என எல்லாம் போய்அகல வந்தருளி

உள்ளத்தின் ஆழத்தில் இறைவன் இருக்கின்றான். அறுவகைக் குற்றங்களும் இறைவனை மூடி மறைக்கின்றன. இறைவன் வெளிப்பட குற்றங்களை நீக்கும் முயற்சி நடக்கும்போது இறைவன் வெளிப்படுகிறான். "வந்தருளி" என்ற சொல்லின் பொருள் இது. அகல என்ற வினையெச்சம் வந்து அருளி என்ற வினை கொண்டு முடிகின்றது. அவன் வந்து அருளினான். அதன் பயனாகப் பொய் அகன்றது. பொய் என்பது குற்றங்கள். ஒளி கண்ட இருள் போல இறைவன் திருவடியால் பொய் அகன்றது.

38. மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே

37இல் வந்தருளி என்ற செயலுக்கு வினை முதல் யார்? வந்தது யார்? இறைவன் தான் சுடர். இது சாதாரண சுடரல்ல. மெய்ஞ்ஞானச் சுடராக, மிளிர்கின்ற சுடராக, மெய்ஞ்ஞானச் சொரூபமான சுடராக உள்ளான் என்பதைக்காட்டுகிறார் மணிவாசகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே.

எவ்வகை ஞானமும் இல்லாத எனக்கு பெருமின்பத்தைத் தரும் பெருமானே என்கிறார்.

40. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.

41. ஆக்கம் அளவு இறுதி இல்லாய்

அஞ்ஞானம் – அறியாமை. அஞ்ஞானம் மனிதனுக்கு இயல்பாய் அமைந்த ஒன்றாகும். ஒளியைக் கண்டவுடன் இருள் மறைகிறது. அறிவு விளக்கம் பெற்றவுடன் அறியாமை மறைகிறது. இறைவன் இங்கே தூய அறிவுடையவனாக அடிகள் குறிப்பிடுகின்றார். கல்வி கற்பதால் மட்டும் அறியாமை நீங்குமென்று கூறமுடியாது. இறையருளும் வேண்டும். திருப்பெருந்துறையில் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானக் காட்சியில் தூய அறிவுடைய பரம்பொருளைக் காணும் போது ஆக்கம் அளவிறுதி இல்லாய்" இது அளவிடமுடியாததென்று கூறுகின்றார்.

42. ..... அனைத்துலகும் ஆக்குவாய் காப்பாய், அழிப்பாய் அருள் தருவாய் :

இப்பிரபஞ்சம் முழுவதையும் தோற்றுவித்து, காத்து, அழிக்கின்றதாகிய தொழிலைப் பரம்பொருள் செய்கிறது. உயிர்களிடத்துள்ள கருணையினால் இதனைச் செய்து அருள் செய்கிறான்.

43. போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில் :

இந்த வசனத்தில் இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் உண்டு.

1. என்னைப் போக்குவாய் 2. என்னை நின் தொழும்பில் புகுவிப்பாய் திருப்பெருந்துறையில் அடியார் கூட்டத்தின் நடுவே அமர்ந்திருந்த குருநாதர் வாதவூதரரை அழைத்து ஏதோ செய்தார். அமைச்சர் பதவியும் வாதவூரர் என்ற பெயரும் கரைந்து விட்டன. இதனையே 'போக்குவாய்' என்றார். தொழும்பு – அடியார் கூட்டம். இதில் தன்னை சேர்த்தமையால் "புகுவிப்பாய் நின்தொழும்பில்" என்று பாடுகின்றார்.

44. நாற்றத்தின் நேரியாய் சேயா நணியானே.

நாற்றம் என்றால் பொருள், நறுமணம். மணத்திற்கு தனியிருப்பு இல்லை. நாற்றம் (மணம்) குறிப்பிட்ட காலத்தில் வெளிப்பட்டுப் பின் அம்மலரோடு மறையும் இயல்புடையது. இதனை "நாற்றத்தின் நேரியாய்" என்றார். மலரின் மணம் போல திடீரென்று மறைந்தபடியால் ஐயா எங்கே போய்விட்டாய்? என்று நினைத்து அழும் நிலையில் "சேயாய்" என்றார். அப்படி நினைக்கும்போது குருநாதர் அகத்தே காட்சி கொடுக்கிறார். அதனால் அடிகளார் "நணியானே" என்றார்.

45. மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே.

மாற்றம் – சொல். "கழிய" என்பது கழிந்துபோகுமாறு – சொல் மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவையிரண்டுக்கும் எட்டாதவன் இறைவன். பெரிய ஆய்வு செய்தாலும் சொல் மனம் இரண்டும் பிறபட்டுக் கழிந்துபோகுமாறு மேல் நோக்கி நிற்பவன் மறையோன்.

46. கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போல

47. சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று

48. பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்.

பாலுடன் கன்னல், நெய் கலந்தாற்போல சிறந்த அடியார்களின் சிந்தனையுள் இறைவன் புகுந்து பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்.

49. நிறங்கள் ஓர் ஐந்து உடையான்.

பிரபஞ்சத்தில் உள்ள ஐவகை நிறங்கள் உடையவன். சிவப்பு – நீலம் முதலானவை. ஓர் என்ற சொல் கலப்படம் இல்லாத தனித்தன்மை வாய்ந்தது என்ற பொருளைத் தரும். இறைவனை "செம்மேனி அம்மான்" என்றும் இறைவியை "நீலமேனி வாலிழை" என்றும் முன்னோர் கூறுவர்.

49– 50 : விண்ணோர்கள் ஏத்த மறைந்திருந்தாய் எம்பெருமான் – தேவர்கள் வணங்க எங்கள் பிரான் மறைந்திருந்தார்.

50–56 : ..................... வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய இருளை

அறம், பாவம் என்னும் அரும்கயிற்றால் கட்டிப் புறத்தோர் போர்த்து, எங்கும் புழு அழுக்கு மூடி மலம் சோரும் ஒன்பது வாயிற்குடிலை மலங்கப் புலனைந்தும் வஞ்சனைக் செய்ய விலங்கு மனத்தால் விமலா......

மேலேயுள்ள அடிகளில் மணிவாசகர் உடம்பின் தன்மையைக் கூறுகிறார். முன்வினைப்படி உடம்பை மூடியிருப்பது மாயையாகிய இருளென்றும், இந்த உடம்பு ஒன்பது துவாரங்களை உடையது என்றும், கூறுகிறார். இது தோலால் மூடப்பட்ட கூடு. "புழு அழுக்கு மூடி" என்பது உயிருள்ள உடம்பினுள்ளே புழுவும் கிருமிகளும் உண்டு. ஐந்து மூலன்களும் வஞ்சனை செய்கின்றன. மனத்திற்கு ஒரு குறை– குரங்கு மனம் மனத்திலிருந்து பிறக்கும் அன்புஆன்மாவை முன்னேற வைக்கும்.

56–61 ............................... உனக்குக்

கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்.

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி.

நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளார், கசிந்து உள்ளுருகும் அன்புக்கு இடமான மனத்தைத் தந்த திருவருளை நினைக்கின்றார். நன்மை சிறிதும் இல்லாத ஒருவருக்கு அன்புள்ளத்தைத் தந்தானே என்று நன்றி பாராட்டுகிறார். மண்ணில் நீண்ட கழல்கள் காட்டினான். நாயிலும் குறைந்த எனக்கு இப்படியெல்லாம் செய்தவர் தாயிலும் சிறந்தவர் – தத்துவஞானி என்று பாராட்டுகின்றார்.

62. மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே.

63. தேசனே தேன் ஆர் அமுதே சிவபுரனே.

64. பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே.

65. நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

66. பேராது நின்ற பெருங்கருணைப் பேர் ஆறே.

67. ஆரா அமுதெ அளவு இல்லாப் பெம்மானே!
மேலே காட்டிய 6 வரிகளிலும் இறைவனைப் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளார்.

68. ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
ஓர்தல் – சிந்தித்தல், ஆழ்ந்து சிந்திக்காபடியால் உள்ளே இருப்பவனைக் காணமுடியவில்லை. ஒளி இப்பதை அறிந்து இடைவிடாது சிந்தனையைச் செலுத்தினால் (ஓர்ந்தால்) அவ் ஒளி தானே வெளிப்பட்டு நிற்கும்.

69. நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே!
ஒளியாய் நின்றவன் பின்னர் ஆருயிராய் நின்றான் என்று பேசுகின்றார். அவன் ஆருயிராய் வருவதற்குக் காரணம் மனதில் அன்பு நீராய் உருகியதே. இறைவனை நீராய் உருக்கி தான் வந்து குந்திவிட்டான்.

70. இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே.
இங்கே இறைவன் இன்பமும் துன்பமும் இல்லாதவன் என்று கூறுகின்றார். குணங்குறி கடந்து தனித்து நிற்பவனுக்கு இவையிரண்டும் இல்லை. உயிர்கள் படும் இன்பதுன்பங்களில் உயிருடன் கலந்து நிற்கும் இறைவனும் பங்குகொள்கின்ற படியால் இன்பமும் துன்பமும் உள்ளானே என்றார்.

71. அன்பருக்கு அன்பனே யாவையும் ஆய் அல்லையும் ஆம்
அனைவருக்கும் இறைவன் அன்பாகத்தான் இருக்கின்றான். இறைவனிடத்து அன்புள்ளவர்களுக்கு அவர் அன்பர். இதனாலே தான் 'அன்பருக்கு அன்பனே' என்றார். யாவையுமாய் அல்லையுமாய் என்பது எல்லாம் அவன் தான் என்று பொருள் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே.

சோதியனே – ஒளிவடிவானவன் சிவன். துன்னிருள் – செறிந்த இருள். இருளும் அவனது சொரூபமே. தோன்றாப் பெருமையனே என்பது அவனது பெருமை மனத்தால், கற்பனையால் அளவிடமுடியாது – ஆனால் மிக எளிதாக மனதில் நினைக்கக்கூடிய பெருமை உடையவனே.

73. ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானே.

"ஆதியனே" என்று கூறியது என்றும் உள்ள பழமையானவன். "நடுவு அந்தம் அல்லானே" என்று கூறியமையால் தோற்றம் என்பது புலப்படும்.

74. ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே

ஈர்த்தல் – மனதைக் கவர்தல், இழுத்தல் என்று பொருள் கூறுவர். குருந்தமர நிழலில் இருந்தவர் குதிரை வாங்கப் போனவரை ஈர்த்துக் கொண்டார். துறவு பற்றி எண்ணமில்லாத அமைச்சராகிய வாதவூரரை ஈர்த்து அருள் செய்தவரைத் தந்தையென்றும், குருவின் பெருமை உணர்ந்து பெருமானே! என்றும் கூறினார்.

75. கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்.

76. நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே.

பரம்பொருளைப் பற்றிய அறிவாலும், உணர்வாலும் பெற்ற கூர்மைப்பட்ட மெய்ஞ்ஞானம். பழுத்த சிவஞானம் முழுவதுமாக அவரை ஆட்கொண்டு அவரை மாற்றியது. பின் அனுபவநிலை குறையத் தான்வெளிப்பட்டு ஆய்வு தொடங்குகிறது. நோக்கு கண் அல்ல மனம். இது நோக்கு அரிய நோக்கு. பயனற்ற நோக்கு நோக்கரிய நோக்கே என்றார். சாதாரண நோக்கு நுண்மையானதல்ல. இறையுணர்வு மிக நுண்மையான உணர்வு. இதனை நுணுக்கு அரிய நுண் உணர்வே என்றார்.

77. போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே.

எங்கும் இறைவன் இருக்கின்றான். எனவே போதல், வருதல், அவனுக்கு இல்லை. புணர்தல் என்றால் இரு பொருள் சேரவேண்டும். இறைவன் ஆன்மாவுடன் நிலையாக உள்ளான். ஆனபடியால் புணர்வும் இலாப் புண்ணியனே என்றார்.

78–80 : காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே.
ஆற்று இன்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண் உணர்வாய்.

இறைவன் எம்மைக் காவல் செய்கின்றான். அவன் கண் மனம் இரண்டிற்கும் அப்பாற்பட்ட இறைசொரூபம் என்பதால் காண்பரிய பேரொளியே என்றார். இறையனுபவத்தை ஆற்றில் வரும் வெள்ளம் போன்ற இன்பம் என்றார். இன்பம் தந்தவனை அத்தா (தந்தை) என்றார். சுடரொளியாய் காட்சி தருபவன் இறைவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லால் கூறமுடியாத நுண்மையான உணர்வை தெரிவிப்பதுதான் சொல்லமுடியாத நுண் உணர்வாய் என்பதாகும்.

81–83: மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்று ஆன உண்ணார் அமுதே உடையானே

இந்த வையகத்தில் வாழும் உயிர்கள், வளரும் அறிவு ஆகிய அனைத்தும் மாறுபடும் இயல்புடையன. மாறுபாடு இல்லாத பொருள் இறைவன் அவனை சிந்தனையுள் ஊற்றாய் ஒருவன் வருகின்றான் என்கிறார். அடித்தளத்தில் ஊற்றான அமுதே என்றார்.

84. வேற்று விகார விடற்குடம்பின் உள் கிடப்ப

85. ஆற்றேன் எம் ஐயா மரனேயோ என்றென்று.
அடிகளாருக்குக் கிடைத்த அனுபவம் தில்லைக் கூத்தனால் அகற்றப்பட்ட பின் திடீரென சராசரி மனித நிலைக்கு வந்துவிடுகின்றார். உடம்பை இழித்துப் பேசும் நிலை வந்துவிட்டது. ஆற்றேன் எம் ஐயா என்று அரற்றிவிட்டார்.

86. போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்.

87. மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே.

88. கள்ளப் புளக்குரம்பை கட்டு அழிக்க வல்லானே
இந்தப் பொய் உடம்பு அழிந்தால் நிலையாக உள்ள ஆன்மா விடுதலை அடையும். அந்த ஆன்மா மறுபடியும் வேறொரு உடம்பில் புகாமல் செய்யும் இறைவனைப் போற்றிப் புகழ்வதால் இந்த நிலை சித்திக்கும் என்கிறார்.

89. நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே.
சோதி வடிவான இறைவன் ஆழ்மனத்தின் அடியில் நடனமாடுகின்றான். ஒளிவடிவானவனும் அஞ்ஞானமாகிய இருளும் மணிவாசகரின் நினைவில் வர "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே" என்றார். இங்கே இருள் என்பது புற இருளை அன்று மனத்திலுள்ள அஞ்ஞான இருள்.

90. தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

91. அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று.
தில்லைக் கூத்தன் மதுரையில் அடியார்க்கு அருள் செய்பவன். பாண்டி நாட்டைப் பழம்பதியாகக் கொண்டவன் – துன்பங்களுக்குக் காரணமாகிய பிறவிப் பிணியை போக்கவேண்டும் என்ற கருத்தில் அல்லல் பிறவி அறுப்பானே" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92-95 : சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


மணிவாசகர் "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து" என்று கூறுகிறார். பாட்டின் பொருள் அறிதல் வேறு. உணர்தல் வேறு. உணர்ந்து சொல்லுதல் என்பது பாடுபவன், பாடுதலாகிய செயல், பாடும் பாட்டு ஆகிய மூன்றும் ஒன்றாகின்ற நிலையைக் குறிப்பதாகும். பாடுகிறவன் தன்னை மறந்து பாடுதலாகும். நாம் என்ற உணர்வு இல்லாமல் பாடல்.

சிவபுரம் என்பது எங்கேயோ உள்ள ஒரு இடமல்ல. இறைவனது திருவடிக்கீழ் இருப்பதையே சிவபுரத்தின் உள் என்றார்.

கடைசியாக உள்ள அடி பல்லோரும் ஏத்தப் பணிந்து என்பதாகும். செல்வர் என்பதை அடையாக்கி அயல் நின்றார். அனைவரும் பணிந்து ஏத்தச் சிவனடிக்கீழ் செல்வர் பொருள் கூறலாம்.

பணிந்து என்பதைச் செல்வர்க்கு அடையாக்கி சொல்லப்பெறும் பாட்டின் பொருளுணர்ந்து சொல்வார் பல்லோரும் ஏத்தச் சிவபுரம் பணிந்து செல்வர் என்றும் பொருள் கொள்ளலாம்.

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்
'திருவாசகம் சில சிந்தனைகள்' என்ற நூலில்
சிவபுராணம் சிந்தனைகள் என்ற பகுதியில் -
1-95 வரிகளுக்கும் 108 பக்கங்களில் விரிவான பொருள் எழுதியுள்ளார்.
இதனை யான் வாசித்து விளங்கிச் சுருக்கமாக எழுதியுள்ளேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீடனின் சிரத்தை

**சகோதரி யதீஸ்வரி அவர்கள்**

அன்பான பிள்ளைகளே!

அன்பு வணக்கம்!

மழைக்காலம், வருட இறுதிப் பரீட்சை என்று கவனமாக இருப்பீர்கள். இந்நிலையில் பண்டைக்காலக் கதை ஒன்று வாசித்துப் பாருங்கள். குரு சீட உறவு, குருவின் வார்த்தையில் மாணவன் கொண்டிருந்த நம்பிக்கை, அக்கறை இப்படிப் பல அரிய செய்திகளைச் சொல்லும் விநோதமான கதைகள் பல உண்டு. இந்தக் கதையைப் பாருங்கள்.....

ஒரு காட்டின் அருகில் துறவி ஒருவர் சிறு குடிசையில் வாழ்ந்திருந்தார். அவரது அன்றாட உணவு, விருந்து உபசாரம் என்பவற்றிற்காகச் சில ஆடுகளை வளர்த்தார். ஆட்டுப் பால்தான் அவரது உணவு. அறிவு நிரம்பிய ஒரு கிராமப்புறச் சிறுவன் அவரிடம் வந்து சேர்ந்தான். "குருவே! எனக்கு நல்லறிவைப் புகட்டி உதவுங்கள்" என்று வேண்டினான். சிறுவனான அவனை அவர் ஏற்றுக் கொண்டார். சிறந்த ஞானத்தைப் புகட்டும் தகுதியை அவன் பெறவேண்டும் என்று நினைத்தார். முதலில், தன்னிடமுள்ள ஆடுகளை மேய்த்துவருமாறு கூறினார். அந்தச் சிறுவனும் பணிவோடு அவர் கூறியபடி ஆடுகளை மேய்ப்பதில் ஈடுபட்டான். ஆடுகளைப் பகல் முழுவதும் காட்டில் மேய்த்து அழைத்து வருவான். பின் குருவுக்குத் தேவையான பணிகளைச் செய்வான். குரு செய்யும் நித்திய கருமங்களை அவதானமாகக் கவனித்துக் கொள்வான். நாட்கள் ஓடின. காலம் சென்றது..... சிறுவன் ஓரளவு வளர்ந்துவிட்டான். அவனுக்கு மந்திர உபதேசம் செய்ய முடிவு செய்தார் குரு. அதற்கான நல்ல நேரத்தை எதிர்பார்த்திருந்தார். ஒருநாள் அந்த இளைஞன் ஆடுகளைக் காட்டிற்குள் ஓட்டிச் சென்று சில நாழிகை கழிந்தபோது தமக்குத் திடீரென இறைவன் அழைப்பு வந்ததை உணர்ந்தார் குரு.

அவனுக்கு மந்திர உபதேசம் செய்யவில்லையே என எண்ணினார். அவனோ காட்டிற்குள் வெகுதூரம் சென்றிருந்தான். குருவின் சிந்தனை வேகமாகச் செயற்பட்டது. ஆத்மா தனக்குள் ஒடுங்கிக் கொண்டிருந்தது. அருகில் கிடந்த ஒரு (பனை) ஓலை நறுக்கை எடுத்தார். அவனுக்கு உபதேசிக்கவேண்டிய அரிய மந்திரத்தை அதில் தமது நகத்தால் பொறித்தார். அருகில் ஓலையை வைத்தார்.... அதேவேளை அவ்வழியாக ஒரு இடைச்சிறுமி தனது ஆடுகளை மேய்த்துக் கொண்டு வந்தாள். முன்னால் ஓடிவந்த அவள் குரு எழுதிப்போட்ட ஓலை நறுக்கை எடுத்துப் பார்த்தாள் ஏழைப் பெண். தன் இரு காதுகளிலும் பண்டைய வழக்கப்படி ஓலைச் சுருள் அணிந்திருந்தாள். அதில் இடக்காது ஓலைச் சுருள் எங்கோ வீழ்ந்துவிட, அந்தக் காது வெறுமையாகவே இருந்தது. இந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய நல்ல ஓலைத் துண்டைக் கண்டெடுத்த அவள் மிக மகிழ்வுடன் அதனை நன்கு சுரட்டித் தன் இடக்காதுத் துவாரத்தில் அணிந்து கொண்டாள். ஆடுகளை விரட்டிக்கொண்டு சென்றாள். இதேவேளை ஏதோ மன உணர்வில் உந்தப்பட்டுக் காட்டுக்குள் நின்றும் குருவிடம் ஓடோடிவந்த அந்த இளைஞன் குருவின் நிலை கண்டு பதற்றத்துடன் அவர் உடலைத் தன் மார்பில் தாங்கிக் கொண்டான். குருவின் உணர்வு ஒடுங்கிக் கொண்டிருந்தது. தான் எழுதி அவனுக்குரிய மந்திர ஓலை நறுக்கினை அந்த இடைச் சிறுமி எடுத்துக் காதில் அணிந்து செல்வதை கைச் சைகை மூலம் அவனுக்குத் தெரிவித்தார். அவரது வெறும் உடல் அவன் மடியில் சரிந்தது. நுண் உணர்வு கொண்ட இளைஞன் நடந்ததை விளங்கிக் கொண்டான். தன் குருவின் இறுதி நிகழ்வுகளை முறைப்படி செய்து முடித்தான். எல்லாம் முடிந்து ஏனைய துறவிகள் ரிஷிகள் அனைவரும் தத்தம் இடங்களுக்குப் போன பிறகு குரு இறுதியாகத் தன் கைச் சைகை மூலம் தெரிவித்த செய்தியை நன்கு சிந்தித்தான். அவர் தனக்கு உபதேசிக்க எண்ணிய மந்திரம் எழுதிய ஓலையை இடைச்சிறுமி எடுத்துத் தன் காதில் ஓலையாகப் போட்டுக் கொண்டு சென்ற விபரம் அவனுக்கு விளங்கியது. அந்தச் சிறுமியிடமிருந்து அந்த ஓலையைப் பெறுவது எப்படி? சிந்தித்தவாறு இடைப்பாடியை நோக்கி நடந்தான். அங்கே சென்ற அவனுக்கு ஒரு வியப்பான செய்தி கிடைத்தது.

கடந்த சில நாட்கள் வரை ஆடு மேய்த்துத் திரிந்த ஒரு பாமர இடைச்சிறுமி ஆடல் பாடல்களில் மிகச் சிறந்தவளாக மாறி இருப்பதையும், சிக்கலான பிரச்சினைகளுக்கு சுலபமான தீர்வு சொல்வதாகவும் கேள்விப்பட்டான். அந்தச் சிறுமியைத் தேடிப் போய்ப் பார்த்தான். அதே சிறுமி! காட்டில் அடிக்கடி தான் கண்ட அதே இடைச்சிறுமி! ஒற்றைக் காதில் ஓலை அணிந்திருந்தவள். அவன் பார்த்தான்.... இப்போது அவளது இடது காதில் புதிய ஓலைச் சுருள்! ஆம், அவனது குருவின் மந்திர மொழி எழுதியது இதுதான் என்பதை அவன் உணர்ந்தான். அந்த மந்திர மகிமையே அவளை இப்படி மாற்றி இருக்கிறது. இப்போது அதனைக் கேட்டால் அதில் உள்ள மகிமை அவளுக்கு விளங்கிவிடும். தரவே மாட்டாள். அப்போது என்ன செய்யலாம்? எப்படி அந்த ஓலையைப் பெறலாம்?

அந்தச் சிறுமியிடம் சென்ற இந்த இளைஞன் அவளிடம் மிக நயமாகப் பேசினான். காட்டில் அவளைப் பார்த்து அவளிடம் மிகுந்த அன்பு கொண்டிருப்பதாகவும், குரு மறைந்துவிட்டதால் தான் இப்போ சுதந்திரமானவன் என்றும் தனது விருப்பப்படி அவளுக்கு மேலும் சில பயிற்சி கொடுத்து அரச சபையில் மதிப்புப் பெற வைப்பேன் என்றும் இனிமையாகக் கூறினான். அவளது திறமையை வானளாவப் புகழ்ந்தான்! இதனால் மனம் கவரப்பட்ட சிறுமி அவனுடன் செல்வதற்கு இசைந்தாள். அவளது சமீபகால மாற்றத்தால் மிரண்டு போயிருந்த பெற்றோரும் சம்மதித்தனர். இளைஞன் சிறுமியை அழைத்துச் சென்றான்.

தலைசிறந்த கழைக்கூத்தாடி ஒருவனிடம் இருவரும் சேர்ந்தார்கள். சிறுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழைக்கூத்தின் நுட்பங்களைக் கற்று மிக விரைவில் அற்புதமான கழைக்கூத்து ஆடுபவளாக மாறினாள். இளைஞன் அவளுக்குப் பக்கவாத்தியம் வாசிக்கும் மிருதங்கக் கலைஞனானான். அந்த நாட்டின் அரச சபையில் ஒரு பெரிய விழா நடைபெற ஆரம்பித்தது. அந்த விழாவிற்கு பல்வேறு இடங்களிலும் இருந்து பற்பல கலைஞர்கள் வீரர்கள் மல்லர்கள் சென்றனர்.

இந்த இளைஞனும் யுவதியும் இணைந்திருந்த கழைக்கூத்துக் குழுவும் அங்கே சென்றது. கழைக்கூத்து என்பது இருபுறமும் நட்ட தூண்களில் கயிறுபோல வைத்துக் கட்டப்பட்ட மூங்கில் தடிமேல் ஏறி அந்தரத்தில் நின்று பல சாகச நடனங்களைப் புரியும் ஒருவித ஆடற்கலையாகும். தற்கால சர்க்கஸ் வித்தைகளில் இடம்பெறும் மெல்லிய கம்பிப் பாலத்தில் நடப்பது, ஆடுவது போன்றது.

அரசன் முன்னிலையில் ஒரு நாள் கழைக்கூத்து நிகழ்ச்சி நடந்தது. இந்த யுவதி அரிய பல சாகச செயல்களைச் செய்து, ஆடியும் பாடியும் எல்லோருடைய பாராட்டுதலைப் பெற்றாள். இவளது ஆடலில் மகிழ்ந்த அரசன் "இவளுக்கு என்ன பரிசு கொடுக்கலாம்"? என்று சபையோரைக் கேட்டான்.

"அரசர் பெருமானே! இந்த அழகான மங்கை தன் காதுகளில் வெறும் ஓலைச் சுருளை அணிந்திருக்கிறதைப் பாருங்கள்! அவளுடைய அழகிய காதுகளுக்கு விலைமதிப்பில்லாத வைரத் தோடுகள் பரிசளிக்கலாமே" என்று பக்கவாத்தியத் தவில் வித்துவான் 'சட்'டென்று கூறினான். அரசன் அழகியின் காதுகளில் ஓலைச்சுருளைப் பார்த்தான். விலைமதிப்பில்லா மாணிக்கங்கள் வைரங்கள் இழைத்த காதணிகளைத் தருவித்து இதை வாங்கிக் கொள்ள இறங்கிவருமாறு கூத்தாடிய மங்கையை அழைத்தான். அவளோ அவற்றைத் தன்னிடம் வீசி எறியும்படி கூறினாள். அரசன் வியப்புடன் வீசி எறிந்த தோடுகளைத் தன் காலினால் பற்றிப்பிடித்த அவள் காதிலிருந்த ஓலைச்சுருள்களைக் கைகளால் கழற்றிக் கீழே எறிந்தாள். அவற்றை தவில் வித்துவானாக நின்ற இளைஞன் ஏந்திப் பிடித்துக் கொண்டான். அடுத்த விநாடி தவிலை எறிந்துவிட்டு மிக வேகமாக வெளியேறிச் சென்ற இளைஞன் நேரே காட்டிற்குச் சென்றான். ஓலைச் சுரளைப் பிரித்துக் குரவின் மந்திர மொழியைக் கண்ணீருடனும் கருத்துடனும் படித்து அறிந்தான்.

மந்திரச் ஜெபத்தில் சதா ஈடுபட்ட அவன் மிகக் குறகிய காலத்தில் யோகசித்தியை, ஞான ஒளியைப் பெற்றுக் கொண்டான்.

நிறைமொழி மாந்தர் வாக்கில் கிளர்ந்த
மறைமொழி தானே மந்திரம்! என்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்ஒளி தகவல் களஞ்சியம்

✧ **தெல்லிப்பழை தோதரவையம்பதி திருவருள் இராஜ இராஜேஸ்வரி அம்பாள்**

அம்பாளின் வருடாந்த அலங்கார உற்சவம் ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 5ம் நாள் திங்கட்கிழமை ஆரம்பமாகி (19-06-2017) தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும். 30-06-2017 நிறைவு நாள் சிறப்பாக நடைபெறும்.

✧ **வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹோற்சவம்**

ஆனி மாதம் 07ஆம் நாள் (21-06-2017) கொடியேற்றம் இடம்பெற்று 29-06-2017 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 30-06-2017 வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

✧ **வவுனியா வேப்பங்குளம் பத்திரகாளி ஆலயம்**

ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் 25-06-2017 ஆரம்பமாகி 05-07-2017 நிறைவு பெறும்.

✧ **கொழும்பு முகத்துவாரம் திருப்பதி ஸ்ரீ வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு கோவில்.**

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 92 அடி இராஜகோபுரம் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கான மஹா கும்பாபிஷேகம் 09-07-2017 அன்று நடைபெறும்.

✧ **நீர்வேலி கந்தசுவாமி கோவில் சூரபத்மன் வதைப்படலம் வெளியீடு**

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் பிரதமகுருவாக விளங்கியவரும் சிறந்த அறிஞருமாகிய அமரர் சுவாமிநாத இராசேந்திரக் குருக்கள் நினைவாக கந்தபுராணம் சூரபத்மன் வதைப்படலம் வெளியிடப்பட்டுள்ளது. கந்தசஷ்டி உற்சவ கொடியேற்று உபயகாரரின் அன்பளிப்பாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

✧ **கலாபூஷணம் திரு. மூ. சிவலிங்கம் அவர்களால் இரு ஆன்மீக நூல்கள் வெளியீடு**

இணுவில் கலாபூஷணம் திரு. மூ. சிவலிங்கம் அவர்களால் ஔவை மொழி, விநாயகர் மகத்துவம் ஆகிய இரு நூல்கள் தொகுக்கப்பட்டு 18-06-2017 அன்று இணுவில் அறிவாலயத்தில் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✧ **இலங்கையில் முதல் முறையாக சித்தங்கேணி பெரியவளவு மகா கணபதி பிள்ளையார் கோவிலில் 49 குண்ட மகா கும்பாபிஷேகம்**


எதிர்வரும் 05-07-2017 புதன்கிழமை காலை 10.00 மணி முதல் 10.40 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

✧ **நவாலி அந்திரான் முருகமூர்த்தி மகா கும்பாபிஷேகம்**

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய மகாகும்பாபிஷேகம் 30-06-2017 வெள்ளிக்கிழமை நடைபெறும்.


# நீர்வேலி கந்தசுவாமி கோவில்

# சூரபன்மன் வதைப்படலம் வெளியீடு



அமரர்

**சிவஸ்ரீ சுவாமிநாத இராசேந்திரக் குருக்களின்**

நினைவாக ஆலய பரிபாலன சபை

இம்மலரை வெளியிட்டுள்ளது.

கந்தசஷ்டி உற்சவ கொடியேற்றத் திருவிழா

உபயகாரர் இப்பதிப்பித்தலுக்கான

நிதியை வழங்கியுள்ளனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை



அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி, பண்டிதை,

## கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

[முன்னாள் பெருந்தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்]

# ஒன்பதாவது ஆண்டு குருபூசை வைபவம்

**காலம் :** 04-07-2017 செவ்வாய்க்கிழமை

**நேரம் :** காலை 09-00 மணி

**இடம் :** ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

**தலைவர் :** செஞ்சொற்செல்வர்,
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

**அன்புடையீர்,**

வணக்கம், எங்கள் தேவஸ்தானத்தின் பெருந் தலைவராகவும், உலகம் போற்றும் ஆன்மீக அன்னையாகவும் விளங்கிய தாயாரின் ஒன்பதாவது குருபூசை வைபவம் ஆனிமாத விசாக நன்நாளில் எமது தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிப்பதுடன் அன்னையின் குருபூசையைத் தொடர்ந்து நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

காலை 09.00 மணி ஆலயத்தில் விஷேட பூஜை, அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடு.

காலை 09.20 மணி அன்னையின் உருவச்சிலை வழிபாடு.

காலை 09.30 மணி திருமுறை மடத்தில் விஷேட பூசை, வழிபாடு, திருமுறை பாராயணம்
[துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள்]

காலை 09.40 மணி அன்னபூரணி மண்டபத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பம்

காலை 09.45 மணி வரவேற்புரை - திரு.சு.ஏழூர்நாயகம் அவர்கள்
(உப-தனாதிகாரி, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

பண்ணிசை அரங்கம் : திருமதி விமலாதேவி நாகேஸ்வரன் அவர்கள்
( இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம் )

பிரார்த்தனையுரை : சிவஸ்ரீ வா.அகிலேஸ்வரக் குருக்கள்
(பிரதமகுரு, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

சிவஸ்ரீ.இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்
(ஆதீனகர்த்தா, சுந்தர ஆஞ்சநேயர் தேவஸ்தானம்)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(முதல்வர், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

ஜாக்கிரத சைத்தன்ய சுவாமிகள்
(முதல்வர், சிந்மயமிஷன், யாழ்ப்பாணம்)

வாழ்த்துரை **பேராசிரியர் க. தேவராஜா அவர்கள்**
( யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் )

10.30 மணி

தலைமையுரை : **கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**

**மூத்த சிவாச்சாரியார்களை கௌரவித்தல்**

மு.ப. 11.00 மணி **திருமுறை வெளியீடு**
**பன்னிரண்டாம் திருமுறை**
**திருத்தொண்டர் புராணம் (மூன்றாம் பாகம்)**

வெளியீட்டுரை : **பண்டிதர் ம.ந. கடம்பேஸ்வரன் M.A அவர்கள்**
( விரிவுரையாளர், ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்)

முதற்பிரதி பெறுபவர் : **தேசகீர்த்தி திரு.ச.ஆறுமுகநாதன் அவர்கள்**
(உப தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்)

மு.பகல் 11.55 மணி

நன்றியுரை : **திரு. நா. தவநாதன் அவர்கள்**
(நிர்வாகச் செயலாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் )

மதியம் 12.00 மணி **அன்னதானம்**


**நிர்வாக சபை**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை. 15-06-2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த சிவாச்சாரியார் விருது பெறும்



## சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் சோமாஸ்கந்தக் குருக்கள்

பிரதமகுரு, இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்


இணுவில் கிராமத்தில் 3-9-1943ம் நாள் பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றவர். பின் உயர் கல்வியை யா/ திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் கற்றவர். இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் சிவாச்சார்ய பரம்பரையில் உதித்த இவர், தனது வேதாகம கங்கை நெறியை ஆரம்பத்தில் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாசக சாஸ்திரிகள் (கோப்பாய்) அவர்களிடம் கற்றார். பின் கோண்டாவில் பிரம்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகளிடம் தன் கல்வியைத் தொடர்ந்தார். நிறைவாக யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பிரம்மஸ்ரீ சீதாராம சாஸ்திரிகளிடம் கற்றுத் தன் கல்வி அறிவை மேம்படுத்தினார். தனது பெரிய தந்தையார் இணுவில் சிவஸ்ரீ சி. சதாசிவக் குருக்களிடம் நித்திய விதிகளையும், சிவாகம நெறிகளையும் கற்று அவரின் ஆற்றுப்படுத்தலில் வளர்ந்தார். இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலில் 80கள் முதல் பிரதம குருவாக விளங்கி 4 கும்பாபிஷேகங்களை நடாத்திய பெருமை இவரைச் சாரும்.

33 குண்டங்களை அமைத்து மிகப்பெரிய கும்பாபிஷேகங்களை நடாத்திய இவர், மூத்த பாரம்பரிய சிவாச்சார்யர்களில் முதன்மையாகத் திகழ்கிறார். இத்தகு பெருமை வாய்ந்த மூத்த சிவாச்சாரியாரை அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 9வது குருபூசை தினத்தில் கௌரவ விருது வழங்கிப் பணிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த சிவாச்சாரியார் விருது பெறும்



## சிவஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர் இரவிச்சந்திரக் குருக்கள்

பிரதமகுருவும், ஆதீன கர்த்தாவும்,
பத்ரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
திருகோணமலை.

சிவஸ்ரீ இரவிச்சந்திரக் குருக்கள் சோமாஸ்கந்த ஐயர் தம்பதிகளுக்கு 30-08-1956இல் பிறந்தார். திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் கல்வித் தகைமை பெற்றார். தமது குருகுலக் கல்வியை இணுவில் தர்மசாஸ்தா குருகுலத்தில் பெற்றுக் கொண்டார். வண்ணார் பண்ணை சீதாராம சாஸ்திரிகளால் உபநயனம் செய்து வைக்கப்பட்டார். சுவாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களால் சிவாச்சார்ய அபிடேகம் செய்து வைக்கப்பட்டார். திருகோணமலை பத்ரகாளி அம்பாள் ஆலயத்தை பரம்பரை வழியாக 40 ஆண்டுகளாக அறங்காவலராக நிர்வகித்து வருகின்றார்.

**இவர் பெற்ற கௌரவங்களும் விருதுகளும்**


1. கிருபானந்த வாரியார் வழங்கிய "வேதசிகாமணி" பட்டம்.
2. சுவாமி விஸ்வநாதக் குருக்கள் வழங்கிய "காளிதாசன்" பட்டம்.
3. திருகோணமலை மாவட்ட அந்தணர்கள் வழங்கிய "பத்ரகாளி பீடத்ரி வேணீஸ்வரர்" கௌரவம்.
4. இரண்டாவது அனைத்துலக சைவமகா நாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்தவர்கள் இவரது சைவ சமயப் பணியைப் பாராட்டி கௌரவித்தார்கள்.
5. சிற்பக் கலைஞர் இரவீந்திரராசா அவர்களால் "புகழேந்திய அருட்பணி வள்ளல்" என்னும் புகழ்மாலை வழங்கப்பட்டது.
6. தமிழருவி சிவகுமார் அவர்களினால் "திருப்பணிச் சித்தர் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
7. நாதஸ்வரக் கலைஞர் வீ.கே. பஞ்சமூர்த்தி குழவினரால் "சிவாகம ஆத்மஜோதி" என்னும் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது.

இத்தகு பெருமை வாய்ந்த மூத்த சிவாச்சாரியாரை அன்னை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 9வது குருபூசை தினத்தில் கௌரவ விருது வழங்கிப் பணிகின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## வடக்கு திசை (குபேரவாசல்) கோபுர
## அடிக்கல் நாட்டு வைபவம் 30-06-2017










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடி தவத்திரு மார்க்கண்டு சுவாமிகள்
தவநிலையம் புனருத்தாரணம் செய்யப்பட்டு
புதுப்பொலிவு பெற்றுள்ளது.



Print Master. T.P. 021-205 3322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org